# أحكام قبر

# கப்ருகளும் அதற்குரிய சட்டங்களும்

هذا بيان وهدي وموعظة للمتقين البناء المتين في قبور المسلمين

**ஆசிரியர்: முப்தி முஹம்மத் இப்றாஹீம் காதிரி பதாயூனி குத்திஸ ஸிர்ரஹு**

**தொகுப்பாளர்: மௌலானா முஹம்மத் தில்ஷாத் அஹ்மத் காதிரி**

**தமிழாக்கம்: மௌலவி ஹாபிழ் F.M. இப்றாஹிம் ரப்பானி ஆலிம் ரஹிமஹுல்லாஹு அன்ஹு.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அஹதிய்யத்திற்குரிய சன்னிதானத்தில் இருந்து அனைத்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் لقد كرّمنا بني آدم ('**நாம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததிகளுக்கு கண்ணியத்தைக் கொடுத்தோம்**') என்னும் பெருமை அருள் புரியப்பட்டது. அதில் விசுவாசிகள் மற்றும் பயபக்தியாளக்கள் போன்றோர் إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللهِ أَتْقَاكُمْ ('**உங்களில் இறைவனின் திருமுன் மிகவும் கண்ணியத்திற்குரியவர் பயபக்தியாளரும் விசுவாசியுமாவார்**') என உயர்த்திப் பேசப்பட்டனர். பின்னர் அவர்களில் சிலர் ரிஸாலத் மற்றும் நுபுவ்வத்தின் மூலம் உயர்ந்து நின்றனர். வேறு சிலருக்கு ஸித்தீகிய்யத் மற்றும் ஷஹீதிய்யத், இணக்கம் போன்ற தகுதிகள் வழங்கப்பட்டன.

இது போன்றே ஒவ்வொரு காலக் கட்டத்திலும் குத்ரத்'துடைய விதவிதமான நிறங்கள் காட்டித் தரப்பட்டன. இந்நிலையில் இறுதிக் காலக்கட்டத்தில் தனது நேசர் மஹ்பூபே கத்மே ருஸுல், ஸையிதே குல், ஸர்தாஜே தோ ஆலம், பாயிஸே தக்லீகே ஆலம் வ ஆதம் ஹழ்ரத் புர்நூர் ஸையிதினா வ மௌலானா கண்மணி நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்க நேர்வழிக்குரிய வெளிச்சத்தை கொடுத்து இறைவன் அனுப்பி வைத்தான். அவர்கள் வருகை தந்தபோது இப்பூமியில் இதற்கு முன்னிருந்த அனைத்து மார்க்கங்களும் செயலற்றதாக ஆக்கப்பட்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தை மட்டும் எல்லா மார்க்கங்களையும் மிகைக்கக் கூடிய ஒன்றாக ஆக்கினான். இதுபற்றிஅ வன் கூறும் போது...

هُوَ الَّذِيْ أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهُ عَلَى الدِّيْنِ كُلِّهِ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ

**'அவன் எப்படிப்பட்டவன் எனில் தனது ரஸூலை நேர்வழியை கொண்டும் சத்தியமான மார்க்கத்தைக் கொண்டும் எல்லா மார்க்கங்களையும் மிகைக்கக் கூடிய ஒன்றாக ஆக்கி அனுப்பினான். இதில் இணை வைப்போர் வெறுப்படைந்தாலும் சரியே!'** எனக் கூறுகிறான்.

அடுத்து தீனெ முஹம்மதீ மட்டும் தான் இறுதி நாள்வரை இவ்வுலகில் நிலைத்திருக்கும் என்னும் சுபச் செய்தியை தரும் வகையில் இறைவன்...

يُرِيْدُوْنَ لِيُطْفِؤُوْا نُوْرَ اللهِ بِأَفْوَاهِهِمْ وَاللهُ مُتِمَّ نُوْرِهِ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

'அவர் (காபிர், முஷ்ரிக்கு)கள் அல்லாஹ் உடைய நூரை தமது வாயால் ஊதி அனைத்து விடலாமென்று நினைக்கின்றனர். ஆனால் இறைவன் தனது நூரை நிறைவு படுத்தாமல் விட மாட்டான். இதில் காபிர்கள் வெறுப்படைந்தாலும் சரியே!' எனக் கூறுகிறான்.

மேலும் அவன்...

وَمَنْ يَّتَبِعْ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ

'யார் இஸ்லாத்தை விட்டு விட்டு வேறொரு மார்க்கத்தை தனது மார்க்கமாக எடுத்துக் கொள்கிறாரோ அவரது மார்க்கம் ஒருபோதும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.' என்றும் கூறுகின்றான்.

அருமை நபியவர்களின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள், தனது ரஸூலை உளமாற விசுவாசிப்பவர்கள், அவர்களின் கட்டளையை ஏற்று அவற்றைக் கண்ணியப்படுத்துபவர்கள் போன்றோரை குறித்து இறைவன் குறிப்பிடும்போது كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ **வெளிப்படுத்தப்பட்ட மனிதர்களில் எல்லாம் நீங்களே மிகச் சிறந்தவர்கள்'** என்றும், أُوْلَآئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ **'அவர்கள் தான் சிருஷ்டிகளிலும் மிகச் சிறந்தவர்கள்'** எனக் கூறி அவர்களை சிறப்பித்து அவர்களை சாட்சியாளர்களாகவும் ஆக்கினான்.

அது மட்டுமின்றி அருமை நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை கண்ணியப்படுத்த வேண்டுமெனக் கட்டளையும் இட்டனர். அவர்களின் கௌரவம், செல்வம், உயிர், மற்றும் கண்ணியத்தை பாதுகாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

**வலிமார்களை குறை கூறுவோர் இறைவனோடு போர் புரிபவர்கள்.**

அவர்களில் குறிப்பான கூட்டத்தை சேர்ந்த வலிமார்களை குறை கூறுவோர் இறைவனோடு யுத்தம் புரிபவர்கள், ஷுஹதாக்கள் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரை மிக உயர்ந்த சிறப்புக்குரிய ஸ்தானத்தில் கொண்டுபோய் வைத்தான். அவர்களை வெறுப்போரையும், துன்புறுத்துவோரையும் தனது விரோதிகள் என்றும் தன்னை எதிர்ப்பவர்கள் என்றும் பிரகடனப்படுத்தினான். இதுபற்றி ஒரு ரிவாயத்தில்,

من آذي لي وليا فقد آذنته بالحرب

**'யார் எனது வலியை துன்புறுத்தி வேதனைக்கு உட்படுத்தினாரோ அவரிடம் நான் போருக்குப் பிரகடனம் செய்கிறேன்.'** எனக் கூறியவன், மற்றோர் ஹதீஸெ குத்ஸியில்....

من عادي لي وليا فقد آذنته بالحرب

**'யார் எனது நேசர்களை விரோதித்துக் கொள்கிறாரோ அவர் என்னோடு சண்டையிட நான் அனுமதி கொடுக்கிறேன்' (அதாவது அவர் என்னோடு சண்டையிடட்டும்)**

இதன் முழு ஹதீஸுமாகிறது ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு

ان الله تعالي قال من عادي لي وليا فقد آذنته بالحرب وما تقرب الي عبدي بشيئ احب الي مما افترضت عليه ةما يزال عبدي

يتقرب الي بالنوافل حتي حببته فاذا احببته فكنت سمعه الذي يسمع به وبصره الذي يبصر به ويده التي يبطش بها ورجله

التي يمشي بها وأن سألني لاعطينه ولئن استعاذني لاعيذنه

**'அல்லாஹ் கூறுகிறான், (இது ஹதீஸெ குத்ஸியாகும்) யார் எனது வலியை வேதனைப்படுத்தினானோ நான் அவனோடு போருக்கு பிரகடனம் செய்கிறேன். மேலும் எப்போது எனது அடிமை என்னால் பர்ழாக ஆக்கப்பட்டுள்ள நான் விரும்பும் பொருட்களின் மூலம் எனது சமீபத்துவத்தைப் பெறுகிறான். இவ்வாறே எனது அடிமை சதா நபிலானவற்றை கொண்டும் என்னை எப்போது சமீபித்து விடுகிறானோ எதுவரையெனில், நான் அவனை எனது நேசனாக்கிக் கொள்கிறேன். அதன்பின் நான் அவனது செவியாகிவிடுகிறேன். அதைக் கொண்டு அவன் கேட்கிறான். நான் அவனது கண்ணாகி விடுகிறேன். அதைக் கொண்டு அவன் காணுகிறான். நான் அவனது கரமாகி விடுகிறேன். அதைக் கொண்டு அவன் பிடிக்கிறான். நான் அவனது காலாகி விடுகிறேன். அதைக் கொண்டு அவன் நடக்கிறான். ஒருவேளை அவன் என்னிடம் எதையாவது கேட்டால் நான் அதை அவனுக்கு அருள் புரிகிறேன்.**

**இன்னும் ஒருவேளை அவன் எனது பாதுகாப்பை கேட்டால் நான் அவசியம் எனது பாதுகாப்பை அவனுக்குத் தருகிறேன்.'** -நூல்: மிஷ்காத், பாகம் 1, பக்கம் 197.

**இறைபாதையில் மரித்தோர் உயிரோடுள்ளோரே**

இவ்வாறே ஷுஹதாக்களை குறித்து கூறும்போது, அவர்களை இறந்தோரென சொல்லக் கூடாதென கட்டளையிட்டான். இவர்கள் முன்னர் வாழ்ந்த வாழ்க்கையை விட இப்போது சிறப்பானதொரு வாழ்க்கையில் உயிரோடு உள்ளனர் எனக் கூறுகின்றான். இதுபற்றி அவன் கூறும்போது...

وَلَا تَقُولُوا لِمَن يُقْتَلُ فِي سَبِيلِ اللهِ أَمْوَاتٌ بَلْ أَحْيَاءٌ وَلَكِن لَّا تَشْعُرُونَ

**'யார் இறைவனது பாதையில் வெட்டப்பட்டாரோ அவரை இறந்தவரென்று சொல்லாதீர்கள். மாறாக அவர்கள் உயிரோடு இருக்கின்றனர். இதனை உங்களால் உணர முடியாது.'** - அல்குர்ஆன் சூறா பகரா வசனம் 154.

தப்ஸீர் மதாரிக்கில் இந்த வசனத்திற்கு விரிவுரை எழுதும்போது....

لا تعلمون ذلكل لان حياة الشهيد لا تعلم حساعن الحسن رضي الله عنه ان اشهداء احياء عند الله تعرض ارزاقهم على

ارواحهم فيصل اليهم الروح والفرح كما تعرض النار على ارواح آل فرعون غدوا وعشيا فيصل اليهم الوجع.

**'நீங்கள் ஷுஹதாக்களின் ஜீவியத்தை பற்றி அறிய மாட்டீர்கள். அதை உங்களால் உணர முடியாது. ஹழ்ரத் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஷுஹதாக்கள் தனது ரப்பிடத்தில் ஜீவியத்தோடு உள்ளனர். அவர்களின் ஆன்மாக்களுக்கு உணவும் வழங்கப்படுகிறது. அதைக் கொண்டு அவர்களுக்கு சுகமும் சந்தோசமும் கிடைக்கின்றது. எவ்வாறு பிர்அவுடைய குடும்பத்தினர் மீது காலையும், மாலையும் வேதனை இறக்கப்படுகிறதோ அவ்வாறு எனக் கூறுகின்றனர்'.** இந்த ஹதீதை அப்துல்லாஹ் பின் அஹ்மத் பின் மஹ்மூதுன் நஸபி என்பார் அறிவிக்கின்றனர். –நூல்: தப்ஸீர் மதாரிக், பாகம் 1, பக்கம் 84.

ஷுஹதாக்களை இறந்து விட்டவரென சந்தேகம் கூட கொள்ளக் கூடாதென தடை செய்யப்படுவதையும் பாருங்கள்...

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللهِ أَمْوَاتًا بَلْ أَحْيَاءٌ عِندَ رَبِّهِمْ يُرْزَقُونَ

**'யார் இறைவனுடைய பாதையில் வெட்டப்பட்டார்களோ அவர்களை இறந்தோரென நீங்கள் எண்ணாதீர்கள். மாறாக அவர்கள் உயிரோடு இருக்கின்றனர். அத்துடன் அவர்கள் தமது ரப்பிடத்தில் இரணமும் பெறுகின்றனர்.**' –அல்குர்ஆன், சூறா ஆல இம்றான், வசனம் 169.

ஆக உண்மையான முஸ்லிம்களுடைய இவ்வுலக வாழ்விலும் மறு உலக வாழ்விலும் இவ்வாறே அவர்களின் ஜீவியத்திலும் மரணத்திலும் மிகச் சிறந்த கண்ணியம் அவர்களுக்குண்டு. அத்துடன் அவர்களுக்கு இறை சமீபத்துவமும் கிடைக்கின்றது. இதனாலேயே ஜும்ஹூர் என்னும் ஏகோபித்த அஹ்லெசுன்னத்தை சார்ந்தோர், எவ்வாறு உயிரோடுள்ள ஒரு முஸ்லிமுக்கு கஷ்டமும் வேதனையும் ஏற்படுகிறதோ அவ்வாறே இறந்து போன ஒரு முஸ்லிமுக்கும் அதே போன்ற கஷ்டமும் வேதனையும் ஏற்படுகிறது என்பதாகக் கூறுகின்றனர். இதுபற்றி ஹதீதில்...

**இறந்தோரின் எலும்பை முறிக்காதீர்**

حيا ككسره الميت عظم كسر

**'உயிரோடுள்ள ஒருவரின் எலும்புகளை முறிப்பது எத்தனை வேதனைக்குரிய ஒன்றோ அதே போன்றது தான் இறந்து போனவரின் எலும்புகளை முறிப்பதும்'** எனக் கூறப்பட்டுள்ளது. –நூல்: இப்னுமாஜா பாகம் 1, பக்கம் 117.

இந்த ஹதீஸை முஹத்திஸ் இப்னு மாஜா ரஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹாவைக் கொண்டு அறிவிக்கின்றனர். அல்லாமா தீபி கூறுகின்றனர்...

اشا رته الي انه لا يهان الميت كما لا يهان الحي

**'இந்த ஹதீஸில் எவ்வாறு உயிரோடு இருப்போரை குறை சொல்வீர்களோ அவ்வாறு இறந்து போனோரை குறை கூறாதீர்கள்**' எனக் கூறப்படுகிறது.

-நூல்: ஹாஷியா இப்னு மாஜா பக்கம் 117.

இது போன்றே அல்லாமா இப்னு அப்துல் பர்ரு கூறுகின்றனர்...

يستفاد منه ان الميت يتألم بجيمح مايتألم به الحي ومن لاوزمه ان يستلذ بما يستلذ به الحي.

**'இதன் மூலம் தெளிவாக்கப்படும் விஷயம் யாதெனில், எந்தெந்த பொருட்களைக் கொண்டு உயிரோடு இருப்பவருக்கு வேதனை ஏற்படுமோ அதே பொருட்களை கொண்டு இறந்தோரும் வேதனையுறுகின்றனர்'.**

-நூல்: சுனன் அபூதாவூத் பாகம் 2, பக்கம் 102.

அல்லாமா ஸுயூத்தி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறுகின்றனர்...

عن جابر خرجنا مع رسول الله صلى الله عليه وسلم في جنازة فجلس النبي صلي الله عليه وسلم فيحفر اللبقر وجلسنا معه فاخرج العفار ساقا او عضدا فذهب ليكسره فقال النبي صلي الله عليه وسلم لا تكسرها فان كسرك اياه ميتا ككسرك اياه حيا.

'ஹழ்ரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர், **நாங்கள் அண்ணலெம்பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு ஒரு ஜனாஸாவில் கலந்து கொள்வதற்காக கிளம்பிய போது நபியவர்கள் அங்கேயே அமர்ந்து விட்டனர். கப்ரு தோண்டப்பட்டுக்கொண்டிருந்தது. நாங்களும் நபியவர்களோடு அமர்ந்திருந்தோம். அப்போது ஒரு மைய்யித்தின் முழங்கால் கப்ரை விட்டும் வெளியே வர அதை ஒருவர் உடைக்க முற்பட்டார். அதைக் கண்ட நபியவர்கள், அதை உடைக்காதீர். ஏனெனில் உயிரோடு இருப்பவரின் எலும்பை உடைப்பது போல்தான் இதுவும் எனக் கூறினர்.**' –நூல்: ஹாஷியா சுனன் அபூதாவூத் பக்கம் 102.

இவ்வாறே இன்னொரு ஹதீதில் ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்...

اذي المؤمن في موته كأذاه في حياته

'**இறந்து போன ஒரு விசுவாசியை வேதனைப்படுத்துவது அவர் உயிரோடுள்ள போது வேதனைப் படுத்தியதற்கு சமமாகும்**.' –நூல்: ஷரஹுஸ் ஸுதூர் பக்கம் 119.

இந்த ஹதீதை முஹத்திஸ் இப்னு ஷைபா அவர்கள் குறிப்பிடுகின்றனர். இது போன்றே மற்றோர் ரிவாயத்தில்...

الميت يؤذيه في قبره ما يؤذيه في بيته

'**எந்த பொருளைக் கொண்டு ஒரு மனிதனுக்கு வீட்டில் வேதனை ஏற்படுமோ அதே பொருளைக் கொண்டு அவனது இறப்புக்குப் பின் அவனது கப்ரிலும் அவனுக்கு வேதனை ஏற்படும்.**' –நூல்: ஷரஹுஸ் ஸுதூர் பக்கம் 119.

சட்ட மேதைகள் இந்த ஹதீதுக்கு விளக்கமளிக்கும்போது, எந்த பேச்சை கொண்டு உயிரோடுள்ள ஒரு மனிதன் வேதனையுறுவானோ அதே பேச்சைக் கொண்டு இறந்து போன ஒரு மய்யித்தும் வேதனையுறும்' எனக் கூறுகின்றனர்.

الميت يتأذي بما يتأذي به الحي

**'எதைக் கொண்டு உயிரோடுள்ளவன் வேதனையுறுவானோ அதைக் கொண்டு இறந்து போனவனும் வேதனையுறுவான்'.** –நூல்: திர்மிதி, பாகம் 1, பக்கம் 121.

**இறந்து போனோரைப் பற்றி புறம் பேசாதீர்**

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்,...

غيبة الميت اشد من الحي وذلك لان عفر الحي والاستحلال له ممكن ومتوقع في الدنيا بخلاف الميت ذكره

علي القاري

**'இறந்தோரை குறித்து புறம் பேசுவது உயிரோடு இருப்பவரை புறம் பேசுவதை விட கடுமையான பாவமாகும். காரணம் உயிரோடு இருப்பவரை பற்றி புறம் பேசினால் அவர் உலகில் உயிரோடு இருப்பதால் அதை மன்னிப்பதற்கோ மறப்பதற்கோ உரிய வாய்ப்புண்டு. ஆனால் இறந்து போனவரின் விஷயத்தில் இது சாத்தியமில்லை.'** –நூல்: ஹாஷியா திர்மிதி, பக்கம் 121.

இவ்வாறே நஸாயி ஷரீபில் கூறப்பட்டுள்ளதாவது....

ذكر عند النبي صلي الله عليه وسلم هالك بسوء فقال لاتذكروا هلك الابخير

**'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இறந்து போன ஒருவரை குறித்து தரக்குறைவாக பேசப்பட்ட போது அது கேட்ட நபியவர்கள், இறந்து போனவரின் நல்லதைத் தவிர வேறொன்றை பேச வேண்டாமென கூறினர்'.**

மேற்காணும் ஹதீதுகளை கொண்டு இறந்தோரை வேதனைப்படுத்தக் கூடாதென தடுக்கப்படுகிறது. அதற்கு மாறாக அவர்களின் வாழ்க்கையில் அவர்களிடம் காணப்பட்ட நல்லதை மட்டுமே பேச வேண்டுமெனவும் கட்டளையிடப்படுகிறது. உதாரணமாக சுனன், அபூதாவூத், திர்மிதி போன்ற நூல்களில்....

'ஹழ்ரத் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர், **அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர், உங்களில் இறந்து போனோரில் காணப்பட்ட நல்லதையும், அழகானதையும் பேசுங்கள். அதற்கு மாறாக அவர்களில் காணப்பட்ட தீயவற்றை பேசுவதில் இருந்து உங்கள் நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள்.**

இது போன்றே புகாரி ஷரீபில் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்க ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர்...

لا تسبوا الاموات فانهم قد افضوا الي ما قدموا..

**'இறந்தோரை தவறாக பேசாதீர்கள். ஏனெனில் அவர்கள் தமது செயல்பாடுகளின் பக்கமாக திரும்பி விட்டனர்.'** –நூல்: புகாரி பாகம் 1 பக்கம் 187.

எனக் கூறுகின்றனர். இதனால்தான் உயிரோடு இருப்பவர் எந்தப் பேச்சை கேட்டு வேதனைப்படுவாரோ அதே பேச்சைக் கேட்டு இறந்து போனவரும் வேதனைப் படுவார் எனக் கூறப்பட்டதோடு, கப்ரை மீண்டும் தோண்டுவதும், அதன் மீது தலையணையை வைத்து சாய்வதும், காலில் மிதியடியை போட்டவாறே கப்ரஸ்தானில் செல்வதும், தேவையில்லாமல் கப்ரஸ்தானுக்குள் பாதை அமைப்பதும் கூடாதென தடை செய்யப்பட்டுள்ளது.

**கப்ருகளின் மீது நடக்காதீர்**

உக்பா பின் ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் கூறுகின்றனர்...

لان اطأعلى جمرة اوعلى حد سيف حتي يخطف..

**'நான் நெருப்பின் மீது நடந்து செல்வதாலோ, அல்லது வாளுடைய கூர்மையின் மீது செல்வதாலோ அதனால் எனது கால் வெட்டப்பட்டு போனாலும் கூட ஒரு முஸ்லிமுடைய கப்ரின் மீது நடந்து செல்வதை விட இது எனக்குப் பிடித்தமான ஒரு செயலாகும்.'**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்...

لان اطأعلي جمرة احب الي من ان اطاء علي قبر مسلم

**'எனக்கு நெருப்பின் மீது செல்வது ஒரு முஸ்லிமுடைய கப்ரின் மீது நடந்து செல்வதை விட பிடித்தமான ஒன்றாகும்.'** -நூல் ஜாமிவுஸ் ஸகீர் பாகம் 2, பக்கம் 103.

.' -நூல் ஜாமிவுஸ் ஸகீர் பாகம் 2, பக்கம் 103.

ஹழ்ரத் பஷீர் பின் கஸாஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு கூறுகின்றனர்...

ان رسول الله صلي الله عليه وسلم رأي رجلا يمشي بين القبور في نعلين فقال ويحك يا صاحب سبتتين اتق

سبتتيك.

**'அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ரஸ்தானில் ஒரு மனிதர் காலில் நெருப்பை அணிந்தவாறு சென்று கொண்டிருப்பதைக் கண்டு, உம்மீது, கைசேதம்!, ஓ! செருப்பணிந்திருப்பவரே! உமது செருப்புகளை கழற்றி விடுவீராக! எனக் கூறினர்.'**

ஹழ்ரத் அம்மாரா பின் ஹஸம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்...

قال رأني رسول الله صلي الله عليه وسلم جالسا علي قبر فقال يا صاحب القبر انزل من علي القبر لا تؤذ

صاحب القبر ولا يؤذيك

**'கப்ரின் மீது அமர்ந்திருந்த என்னைக் கண்ட நபியவர்கள், கப்ரின் மீது அமர்ந்திருப்பவரே! கப்ரை விட்டும் இறங்கும். மேலும் கப்ரில் இருப்பவருக்கு வேதனை தராதீர். அது உம்மை வேதனைப் படுத்தும். (அதாவது அந்த கப்ராளியை நீர் வேதனைப் படுத்தினால் நாளை மறுமையில் அதன் காரணமாக நீர் வேதனைக்கு உள்ளாக்கப்படுவீர் என்பதாகும்.)'** –நூல்: மிஷ்காத் பக்கம் 149.

لَان يجلس احدكم علي جمرة فتحرق ثيابه فتخلص الي جلده خيرله من ان يجلس علي قبر مسلم..

**'உங்களில் எவரேனும் நெருப்பின் மீது அமர்ந்து அது அவரது ஆடையை கரித்து அவரது தோலையும் கரித்து விட்டாலும் கூட இது ஒரு முஸ்லிமுடைய கப்ரின் மீது அமர்வதை விட மேலானதாகும்.'** –நூல்: ஸஹீஹ் முஸ்லிம் பாகம் 1, பக்கம் 312.

இது போன்றே மராகில் ஃபலாஹ் என்னும் நூலில் அல்லாமா ஷரம்பானி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறுகின்றனர்...

اخبرني شيخي العلامة محمد بن احمد الحموي الحنفي بانهم يتأذون بخفق النعال.

**'எனக்கு எனது ஷெய்கு அல்லாமா முஹம்மத் பின் அஹ்மத் அலவி ஹனபி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறினர், அதாவது இறந்தோர் செருப்பின் காலடி சப்தத்தை கேட்டு வேதனையுறுகின்றனர்.'** –நூல்: மராகில் ஃபலாஹ் பக்கம் 106.

**'ஒருவர் ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்டார், அதாவது கப்ரின் மீது காலை வைப்பது பற்றிய தங்களின் கருத்தென்ன? எனக்**

**கேட்க, அதற்கவர்கள் உயிரோடு இருப்பவரை வேதனைப்படுத்துவதை எவ்வாறு நான் விரும்பவில்லையோ அவ்வாறே இறந்து போனவரை வேதனைப்படுத்துவதையும் நான் விரும்பவில்லை எனக் கூறினர்.'**

**கப்ரில் இருப்போரை வேதனைப் படுத்தாதீர்.**

அடுத்து **அஷ்அத்துல் லம்ஆத்** என்னும் நூலில் அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்...

از یں جا مستفاد میگردد کہ متالم میگردد بجمیع انچہ متالم میگردد بداں ولازم
ایں ست کہ متلذ ذ گردد بتمام انچہ متلذ ذ می شود بداں زندہ

**'மேற்காணும் ஹதீஸ்களை வரலாற்றுச் சம்பவங்களை கொண்டு நமக்குத் தெளிவாக்கப்படும் விஷயம் யாதெனில், மய்யித்திற்கு தன்னை ஜியாரத்து செய்ய வருவோர் எத்தனை தூரம் கண்ணியம் அளிக்கின்றனர் என்பதை தெரிந்து கொள்வதைப் போல அதை வேதனைப்படுத்துவதையும் அது தெரிந்து கொள்கிறது. ஆதலால் முஸ்லிம்கள் கபரை தோண்டுவதும், கப்ரின் மீது செருப்பை அணிந்து செல்வதும், கப்ரின் மீது சாய்ந்து அமர்வதும், ஷரீஅத் சட்டப்படி மக தடை செய்யப்பட்ட ஒன்றுமாகும். இதனால் அக்கப்ராளிக்கு வேதனை ஏற்படுகிறது.'** -நூல்: அஷ்அத்துல் லம்ஆத் பாகம் 1, பக்கம் 617.

இது போன்றே **தலாயிலுன் நுபுவ்வத்** என்னும் நூலில் இப்னு மீனா என்பார் கூறுகின்றனர்...

**'நான் ஒரு மக்பராவுக்கு சென்றேன். அங்கே இரண்டு ரக்அத் நபில் தொழுகை தொழுதபின் படுத்து விட்டேன். அப்போது நான் நல்ல வேளையாக உறங்கவில்லை. அப்போது திடீரென கப்ருக்குள் இருந்து, எழுந்து விடு. நீர் என்னை வேதனைக்குள்ளாக்கி விட்டீர் என சப்தம் வந்தது'**

அடுத்து **ஷரஹுஸ் ஸுதூர்** என்னும் நூலில், **ஹழ்ரத் காசிம் பின் மக்மரா** என்பாரைக் கொண்டு அறிவிக்கப்படுவதாவது...

لان أطاء علي سنان رمحي حتي ينفذ من قدمي احب الي ان اطاء علي قبر وان رجلا وطئي علي قبر وقلبه

ليقظان اذ سمع صوتا من القبر اليك عني يا رجل لا تؤذوني.

**;நான் வாளின் கூர்மையின் மீது நடந்து சென்று அது எனது காலை துண்டித்து விட்டாலும் கூட பரவாயில்லை. அதே நேரம் ஒரு முஸ்லிமுடைய கப்ரின் மீது நடந்து செல்வதை விட**

**இது எனக்குப் பிரியமான ஒன்றாகும். அப்போது ஒருவர் கப்ரைத் தோண்டிக் கொண்டிருந்தார். அதுபோது அவர் விழித்துக் கொண்டுதான் இருந்தார். அப்போது கப்ருக்குள்ளிருந்து நீர் எனக்கு கஷ்டத்தை கொடுத்து விட்டீர் என சப்தம் வந்தது.'** -நூல்: ஷரஹுஸ் ஸுதூர்.

இதுகுறித்து சட்ட மேதைகள் கூறும்போது...

ان المشي علي القبور يكره

**'கப்ரின் மீது நடந்து செல்வது மக்ரூஹாகும்'** -நூல்: பத்ஹுல் கதீர், பாகம் 2, பக்கம் 150.

பத்ஹுல் கதீர் என்னும் நூலில் அல்லாமா இமாம் இப்னு ஹுமாம் என்பார் கூறுகின்றனர்...

يكره اجلوس علي القبر وطؤه..

**'கப்ரின் மீது அமர்வதும் அதன்மீது நடந்து செல்வதும் மக்ரூஹாகும்.'**

-நூல்: பத்ஹுல் கதீர் பாகம் 2, பக்கம 150.

இவ்வாறே அல் பஹ்ருர் ராயிக் என்னும் நூலில் அல்லாமா இப்னு நஜீம் என்பார் கூறுகின்றனர்...

ويكره انيطأ القبر اويجلس اوينام عليه او يقضي عليه حاجة من بول او غائط او يصلي عليه او اليه ثم المشي عليه.

**'கப்ரை தோண்டுவதும், அதன்மீது அமர்வதும், அதன்மீது படுத்து உறங்குவதும், அதன்மீது மலஜலம் கழிப்பதும் அதன் மீதோ அல்லது அததை நோக்கியோ தொழுவதும் அதன்மேல் நடந்து செல்வதும் மக்ரூஹாகும்.'** –நூல்: பஹ்ருர்;ராயிக் பாகம் 2 பக்கம் 209

ياثم بوطئ القبور لان سقف القبر حق الميت.

**'மனிதன் கப்ரின் மீது நடந்து செல்வதால் பாவியாகி விடுறான். ஏனெனில் கப்ருடைய மேல் பகுதி மையியித்துக்குரிய உரிமையை சேர்ந்த இடமாகும். இதன் மூலம் ஒருவரது உரிமைக்குரிய பொருளை ஆக்கிரமிப்பது ஷரீ அத்திற்குரிய சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.'**

**கப்ரஸ்தானைப் பற்றிய மார்க்கச் சட்டம்.**

**பதாயிவுஸ் ஸனாயிஃ** என்னும் நூலில் கூறப்படுவதாவது...

وكره ابوحنيفة ان يوطأعلي قبرويجلس عليه اوينام او نقضي عليه حاجة من بول وبراز لما روي عن النبي صلي الله عليه وسلم انه نهي عن الجلوس علي القبور.

**'இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். கப்ரைத் தோண்டுவதும், அதன்மீது படுத்து உறங்குவதும், அதன்மீது மலஜலம் கழிப்பதும் மக்ரூஹ் எனக் கூறுகின்றனர். ஏனெனில் நபியே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ரின் மீது அமர்வதை தடை செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.'** –நூல்: பதாயிவுஸ் ஸனாயிஃ பாகம் 1 பக்கம் 320

மதாலிபுல் முஃமினீன் என்னும் நூலில்...

وان صار الميت ترابا في القبر يكره دفن غيره في قبره لان الحرمة باقية

**'ஒருவேளை மையித் கப்ரில் மண்ணோடு மண்ணாக ஆகிப் போனாலும் கூட அந்த இடத்தில் வேறொரு மையித்தை அடக்கம் செய்வது மக்ரூஹ் ஆகும். ஏனெனில் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள மையித்தின் கண்ணியம் இன்னும் மீதமுள்ளது.'**

இது போன்றே அல் பஹ்ருர்ராயிக் என்னும் நூலில் கூறப்படுகிறது...

ويكره قطع العطب والحشيش من المقبرة الا اذاكان يابسا..

**'கப்ரஸ்தானில் விளைந்துள்ள புல்லை அறுப்பதும், அங்குள்ள மரத்தின் குச்சிகளை உடைப்பதும் மக்ரூஹ் ஆகும். ஒருவேளை அவை காய்ந்து போனால் அவைகளை அறுப்பதும், குச்சிகளை உடைப்பதும் கூடும்.'** –நூல்: அல்பஹ்ருர்ராயிக் பாகம் 2, பக்கம் 211.

**காய்ந்து போன புல்லை வெட்ட அனுமதித்தற்குரிய காரணமானது, அப்புற்கள் எதுவரை பசுமையாக உள்ளதோ அதுவரை அவை அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பதால் அதன் மூலம் அம்மய்யித்துகள் அந்த தஸ்பீஹை கேட்டு சந்தோசம் அடைவதோடு இறைவனுடைய ரஹ்மத்தும் அங்கே இறங்கிக் கொண்டிருக்கும் என்பதால் பசுமையாக இருக்கும் வரை அவைகளை வெட்டக் கூடாதெனக் கூறப்படுகிறது.** –ஆதாரம்: பதாவா ஆலம்கீரி பாகம் 1, பக்கம் 167.

அடுத்து அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி ரஹ்மஹுல்லாஹு அவர்கள் **ஷரஹு மிஷ்காத்**தில் கூறுகின்றனர்...

مراد آں ست کہ روح میت ناخوش میدارد وراضی نیست بہ تکیہ کردن
برقبر وے از جہت تضمن وے اہانت واستخفاف را بووے

**'கருத்து என்னவெனில், மைய்யித்துடைய ஆன்மா சலிப்படைந்து வெறுப்படைகிறது. தலையணையை கப்ரின் மீது வைப்பதால் அது அதை பொருந்திக் கொள்வதில்லை. காரணம் இவைகளெல்லாம் அதை கேவலப்படுத்துகின்றன. அதே நேரம் இக்காரியம் அதை வெட்;கப்படுத்துகின்ற காரியமாகும்.'** -நூல்: அஷ்அத்துல் லம்ஆத் பாகம் 1, பக்கம் 619.

இவ்வாறே **ஹதீகயே நதிய்யா** என்னும் நூலில்...

معناه ان الارواح تعلم بترك اقامة الحرمة والاستهانة فتتاذي بذلك

'இதனுடைய அர்த்தம் யாதெனில் ஆன்மா தன்னை கேவலப்படுத்துவதையும், சிறுமைப்படுத்துவதையும் அறிந்து கொள்கிறது. அதனால் அதற்கு வேதனை ஏற்படுகிறது.'

**மராகில் ஃபலாஹ்** என்னும் நூலில்...

كره وطؤها بالاقدام لما فيه من عدم الاحترام.

**'கப்ரை காலால் மிதிப்பது மக்ரூஹாகும். ஏனெனில் இதில் அந்த ஆன்மாவை சிறுமைப்படுத்துகின்ற, மரியாதை குறைவாக பார்க்கும் நிலை காணப்படுகிறது.'**

-நூல்: மராகில் ஃபலாஹ் பாகம் 1, பக்கம் 106.

ஆக கப்ரை காலால் மிதிப்பதால் அக்கப்ரில் அடக்கப்பட்டிருப்பவரை கேவலப்படுத்துகின்ற, சிறுமைப்படுத்துகின்ற நிலை காணப்படுகிறது. இதைப் பற்றி அம்மைய்யித்து தெரிந்து கொள்கிறது. அதன்மூலம் அதற்கு வேதனையும் ஏற்படுகிறது. ஆதலால் மையித்தை ஜியாரத்தை செய்யும் போது அதனுடைய கண்ணியத்தை பேணுவது வாஜிபாகும்.


அடுத்து அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றனர்...

كنت ادخل بيتي اي فيه رسول الله صلي الله عليه وسلم واني واضع ثوبي اقول انما زوجي وابي فلما دفن

عمرفوالله ما دخلته الا وانا مشدودة علي ثيابي حياء من عمر.

**'நான் எனது வீட்டுக்குள் செல்வதுண்டு. அதில்தான் அருமை நபியவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தனர். அப்போதெல்லாம் நான் பர்தா அணிந்து செல்வதில்லை. அதுபோது நான் எனது உள்ளத்தில், இவர்கள் எனது கணவரும், தந்தையுமாவார் என சொல்லிக் கொள்வதுண்டு. இனி உமர் ரலியல்லாஹு அன்ஹு அந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட பின் வெட்கத்தின் காரணமாக நான் பர்தா அணிந்து கொண்ட பின்னரே அவ்வீட்டுக்குள் செல்லத்துவங்கினேன்.'** -நூல்: மிஷ்காத் பாகம் 1, பக்கம் 154.

மேற்கண்ட ஹதீஸுக்கு விளக்கம் தரும் வண்ணம் அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்...


که حدیث دلیل واضح بر حیات میت وعلم وے وآنکه واجب است
احترام میت نزد وزیارت وے خصوصا صالحاں ومراعات ادب
برقدر مراتب ایشاں چنانچه درحالت حیات ایشاں بود زیرا
که صالحاں رامدد بلیغ ست مرزیارت کنندگان خود رابر
اندازهٔ ایشاں

**'இந்த ஹதீது மய்யித்து உயிரோடு உள்ளது என்பதையும், அது ஒவ்வொன்றையும் புரிந்து கொள்கிறது என்பதையும் ஆதாரப்படுத்துகின்ற ஒன்றாகும். எனவே ஸியாரத்தின் போது மய்யித்தை கண்ணியப்படுத்துவது வாஜிபாகும். அதிலும் குறிப்பாக ஸாலிஹீன்களுடைய தர்காவை ஜியாரத்து செய்யும்போது அவர்களின் தகுதிக்குத் தக்கவாறு அவர்களை கண்ணியப்படுத்துவது அவசியமாகும். எவ்வாறு அவர்கள் உயிரோடு இருக்கும்போது அவர்களை நாம் கண்ணியப்படுத்தினோமோ அவ்வாறு அவர்களின் இறப்புக்குப் பின்னரும் அவர்களை கண்ணியப்படுத்துவது வாஜிபாகும். காரணம் ஸாலிஹீன்கள் தம்மை ஜியாரத்து செய்வோரது நிலைகளுக்குத் தக்கவாறு அவர்களுக்கு உதவியும் செய்கின்றனர்.'**

-நூல்: அஷ்அத்துல் லம்ஆத் பாகம்1, பக்கம் 636.

அடுத்து ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றனர்;....

قال رسول الله صلي الله عليه وسلم ما من احد يمر بقبر اخيه المؤمن كان يعرفه فسلم عليه الا عرفه ورد

عليه السلام

**'ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர், யாராவது ஒரு விசுவாசி தனது சகோதரருடைய கப்ரு இருக்கும் வழியாக சென்றால் அக் கப்ரில் அடக்கப்பட்டுள்ளவர் யாரென்று தெரிந்து கொண்டு அவருக்கு அவர் ஸலாம் சொன்னால் அக்கப்ரில் அடக்கப்பட்டுள்ளவரும் தனக்கு ஸலாம் சொல்பவர் யார் என்பதை தெரிந்து கொண்டு அவரது ஸலாமுக்கு பதில் கூறுகிறது.'** -நூல்: வஃபாவுல் வபா பாகம் 4, பக்கம் 363.

**கப்ரை கெட்டிப்படுத்துவதும், அதன்மீது குப்பா, தர்கா கட்டிடம் கட்டுவதும்.**

ஷரீஅத்தின் சட்டப்படி கப்ரை கெட்டிப்படுத்துவது கூடுமா? கூடாதா? இவ்வாறே அதன் பக்கத்தில் கட்டிடமோ அல்லது மஸ்ஜிதோ கட்டுவது கூடுமா? கூடாதா? என்பன போன்ற இக்கேள்விகளுக்குரிய பதில் என்னவெனில், கப்ரை ஜியாரத்துச் செய்தல் என்பது எல்லா முஸ்லிம்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இந்நிலையில் கப்ரு இருப்பதற்குரிய அடையாளமே தெரியவில்லை எனில் ஜியாரத் எவ்வாறு நடைபெற முடியும்? ஆதலால் எந்த இடத்தில் ஒரு கல்லை ஊன்றி அடையாளமிட முடியுமோ அந்த இடத்தில் ஒரு கல்லை ஊன்றி அக்கப்ருக்கு அடையாளமிடவேண்டும். ஒருவேளை அந்த இடம் வெறும் தரையும் மணலும் உள்ளதாக இருந்தால் அந்த இடத்தில் உள்ள கப்ரை கெட்டிப்படுத்த வேண்டும்.

இவ்விஷயத்தில் இவ்வாறு செய்தல் கூடாது என்பதற்கு குர்ஆனிலோ அல்லது ஹதீதிலோ தெளிவான எந்தவொரு ஆதாரமும் இல்லை. பொதுவாகவே கப்ரை கட்டுவது என்பதே கூடாது. (ஆனால் அதே நேரம் எந்த இடத்தில் ஒரு பெரியோரது கப்ரோ அல்லது ஒரு இறைநேசரின் கப்ரோ இருக்கிறது என்பது தெரியவந்தால் அந்த இடத்தை எடுத்துக் கட்டுவதும் ஒரு மஸ்ஜிதை அங்கு ஏற்படுத்துவதும் அது ஒரு ஸாலிஹான மனிதரின் கப்ரு என்பதை அடையாளப்படுத்திக் காட்டுவதற்காகவும், அங்கே வருகை தருவோர் அக்கப்ராளியின் மூலம் பரக்கத்தை பெறுவதற்காகவும் இவ்வாறு செய்தல் முன்னோர்களது சுன்னத்தாகும். இது குறித்த ஆதாரம் குர்ஆனில் உள்ளது) உதாரணமாக குர்ஆனிலுள்ள சூறா கஹ்பில் கூறப்படும் கீழ்க் கண்ட வசனத்திற்குரிய விரிவுரையில்...

فقالوا ابنوا عليهم بنيانا

**'அதன்மீது கட்டிடத்தைக் கட்டுங்கள் எனக் கூறினர்'** -அல்குர்ஆன் சூறா கஃப், வசனம் 21.

சூரத்துல் கஹ்பிலுள்ள மேற்கண்ட வசனத்திற்கு விரிவுரை செய்யும்போது, தப்ஸீர் மதாரிக் என்னும் நூலாசிரியர் கூறுகிறார்...

فقالوا حين توفي الله اصحاب الكهف ابنوا عليهم بنيانا اي علي باب كهفهم لئلا يتطرق اليهم الناس بتربتهم

ومحافظة عليها كما حفظت تربة رسول الله صلي الله عليه وسلم بالحضيرة

**'எப்போது இறைவன் அஸ்ஹாபுல் கஹ்புகளுக்கு மரணத்தை தந்தானோ அப்போது ஜனங்கள் அவர்களுடைய குகையின் மீது கட்டிடம் கட்டுமாறு கூறினர்.**

**ஏனெனில் அவர்களின் கப்ரை நடைபாதையாக்கி விடக் கூடாது என்பதற்காக. அத்துடன் அவர்களின் கப்ரு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் கட்டிடம் கட்ட வேண்டுமெனக் கூறினர். எவ்வாறு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரை கட்டிடத்தைக் கொண்டு பாதுகாக்கப்பட்டதோ அவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறினர்.'**

-நூல்: தப்ஸீர் மதாரிக், பாகம் 3, பக்கம் 7.

**தப்ஸீர் மதாரிக்**கின் ஆசிரியர் அடுத்துக் கூறுகிறார்....

قال الدين غلبوا علي أمرهم من المسلمين وملكهم وكانوا اولي بهم وبالبناء عليهم لنتخذن عليهم علي باب

الكهف مسجدا يصلي فيه المسلمون ويتبركون بمكانهم

**'அஹ்லெ இஸ்லாமியர்களும் அதிகாரிகளும் எப்போது அஸ்ஹாபுல் கஹ்புகளின் விஷயத்தில் முழு அதிகாரத்தை பெற்று விட்டனரோ அப்போது அவர்கள் அங்கே ஒரு மஸ்ஜிதை கட்டுவதற்குரிய உரிமையையும் பெற்றிருந்த காரணத்தால் அவர்கள், நாங்கள் கண்டிப்பாக இக்குகை வாசலில் ஒரு மஸ்ஜிதைக் கட்டுவோம். எதற்காக எனில், அவர்களை ஜியாரத்துச் செய்ய வருவோர் அந்த மஸ்ஜிதில் தொழுது பரக்கத்தையும் பெறுவார்கள் எனக் கூறினர். '**

-நூல்: தப்ஸீர் மதாரிக் பாகம் 3, பக்கம் 7.

**தப்ஸீர் பைளாவி**யில் கூறப்பட்டிருப்பதாவது...

ثم رجعوا الي مضاجعهم فماتوا وبني عليهم مسجدا..

**'பின்னர் அஸ்ஹாபுல் கஹ்புகள் தங்கின் இருப்பிடத்திற்கு திரும்பி வந்தபோது அவர்கள் அகாலமெய்தி விட்டதால் அங்கே ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது.'**

மேற்கண்ட சம்பவத்திற்குரிய வளக்கம் யாதெனில், அஸ்ஹாபுல் கஹ்புகள் அகாலமெய்திய போது அவர்கள் அக்குகையிலேயே அடக்கம் செய்யப்பட்டனர். அதைக் கண்ட சிலர், அவர்களின் கப்ரு பாதுகாக்கப்படுவதற்காகவும், ஜனங்கள் அக்கப்ரை மிதித்து விடக் கூடாது என்பதற்காகவும் அந்த இடத்தில் ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமென்றும், எவ்வாறு நபியவர்களின் கப்ரின் மீது ஒரு கட்டிடம் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறதோ அவ்வாறு கட்டப்பட வேண்டுமெனக் கூற, அவ்வாறே கட்டப்பட்டது.

அதுபோது ஆட்சியாளர்களுக்கும் இஸ்லாமியர்களிலுள்ள பெரியோர்களுக்கும் ஒரு கட்டிடம் கட்டும் உரிமை அவர்களிடம் இருந்ததால்அவர்கள், நாங்கள் இங்கே ஒரு மஸ்ஜிதை கட்டுவோதம். அது இஸ்லாமியர்களின் நினைவுச் சின்னமாக விளங்கும். அத்துடன் தொழுவோரும் இம்மஸ்ஜிதில் வந்து தொழுவார்கள். அதன் மூலம் அவர்களுக்கு பரக்கத்தும் கிடைக்குமத் எனக் கூறியதற்கொப்ப அந்த இடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது. இதுபற்றி நமது ஷரீஅத்தில் இதெல்லாம் மாற்றியமைக்கப்பட்டு விட்ட அல்லது தடை செய்யப்பட்ட ஒன்றென மறுக்கப்படவில்லை. மாறா கப்ரை வணங்குவதும், அதன் மீது கர்ப்பக்கிரகம் கட்டுவதையும் தான் (இது யூத, கிறிஸ்துவர்களின் நடைமுறையாகும்) ஷரீஅத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்றே அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்...

قال البيضاوي لما كانت اليهود والنصاري يسجدون قبور الانبياء تعظيما لشأنهم ويجعلونها قبلته يتوجهون في

الصلوة نحوها واتخذوها اوثانا منعهم المسلمين ذلك فاما من اتخذ مسجدا في جوار صالح وقصد التبرك

بالقرب منه لا التعظيم ولا التوجه نحوه فلايدخل ذلك الوعيد

**'யூத, கிறித்துவர்கள் நபிமார்களின் கப்ருகளை வணங்கி வந்தனர். இன்னும் அவர்களை கண்ணியப்படுத்துவதற்காக அவர்களை தங்களின் கிப்லாவாக ஆக்கிக் கொண்டிருந்தனர். மேலும் தொழும்போது அவர்களை நோக்கித் தொழுதனர். அத்துடன் அவர்களின் கப்ரை பூஜித்தும் வந்தனர். இதைத்தான் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது உம்மத்தாராகிய முஸ்லிம்களுக்கு தடை செய்தனர்.**

**அதற்கு மாறாக ஏதாவதொரு பெரியாரின் கப்ருக்குப் பக்கத்தில் ஒரு மஸ்ஜிதை கட்டி அதன் மூலம் பரக்கத்தை நாடுவதோ அல்லது அக்கப்ரில் அடக்கப்பட்டுள்ளவரது சமீபத்துவத்தை நாடாத நிலையில் அவர்களை கண்ணியப்பபடுத்த வேண்டும் என்பதற்காக மட்டும் அவர்களை கிப்லாவாக ஆக்குவது மேற்கண்ட தடைகளில் வராது எனக் கூறுகின்றனர்.**

**ஸஹீஹ் புஹாரி ஷரீபில்** கூறப்படுகிறது...

لعن الله اليهود والنصاري اتخذوا قبور انبيأءهم مساجد

**‘அல்லாஹ் யூத, கிறித்துவர்களை ல.்னத்துச் செய்தான். எதற்காக எனில் அவர்கள் தங்களது நபிமார்களின் கப்ருகளையே மஸ்ஜிதாக ஆக்கினர் என்பதற்காக.**' –நூல்: புகாரி, பாகம் 1, பக்கம் 61.

**தைஸீருல் காரி ஷரஹு புகாரி**யில் கூறப்படுகிறது...

لعنت کردہ است خدا یہود را ازیں جہت است کہ گرفتہ اند قبرہاء
انبیاء خود را مساجد خواہ بہ نبش از راہ اہانت یا بے نبش از راہ غلو
در تعظیم بعبادت قبرہا وسجدہ کردن مر آں را پس معلوم شود کہ
موجب لعن طعن ہمیں دو چیز بودہ است

**'அல்லாஹ்தஆலா யூதர்களை ல.்னத்துச் செய்ததற்குரிய காரணமானது, தமது நபிமார்களின் கப்ருகளை மஸ்ஜிதாக ஆக்கினர். ஒன்று அவர்களின் கப்ருகளை தோண்டி அவற்றை அவமதிக்கம் வகையில் அல்லது தோண்டாது அக்கப்ருகளை மஸ்ஜிதாக ஆக்கினர். மேலும் அக்கப்ருகளை நோக்கி அவர்கள் வணங்கியதோடு அதனை அவர்கள் வணக்கத்திற்குரிய ஒன்றாகவும் ஆக்கி அவர்களை கண்ணியப்படுத்துகிறோம் என்னும் பெயரில் எல்லை மீறி அளவு கடந்து செயல்பட்டதால் இவ்விரு காரியங்களும் அவர்களை ல.்னத்துக்கு உரியவர்களாக ஆக்கிற்று**' –நூல்: தைஸீருல் காரி ஷரஹு புகாரி பாகம் 1, பக்கம் 162.

**பரக்கத்திற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் தர்கா பள்ளிவாசல்களில் தொழுதல் கூடும்.**

அடுத்து **அஷ்அத்துல் லம்ஆத்** என்னும் நூலில்...

اما اگر در قرب قبر ایشان مسجدے بنا کنند یا نمازے بکند بے توجہ
بجانب آں تا بہ برکت مجاورت آں موضع کہ مدفن جسد مطہر
ایشاں است و بامداد نورانیت از روحانیت ایشان عبادت کمالے
وقبول یابد دریں جا محذورے لازم نمی آید وباکے نیست کذا قال
ابن حجر المکی

www.sufimanzil.org

**'அவர்களுடைய (நபிமார், வலிமார்) கப்ருக்கு அருகாமையில் ஒரு மஸ்ஜிதை கட்டி அவர்களை நோக்கி தொழாமல் கிப்லாவை நோக்கி, எந்த இடத்தில் அவர்களது புனித தேகம் அடக்கம் செய்யப்பட்டுள்ளதோ(தர்கா) அந்தஇடத்தின் பரக்கத்தைப் பெறும் நோக்கத்திலும், அவர்களது ஆன்மீக மற்றும் நூரானியத்தின் ஆற்றலை கொண்டு தனது தொழுகை அங்கீகாரத்தை பெறும் என்னும் என்ற எண்ணத்தில் தொழுதால் எந்தத் தவறுமில்லை.'**

-நூல்: அஷ்அத்துல் லம்ஆத் பாகம் 1, பக்கம் 295.

இதுபோன்றே **இமாம் இப்னு ஹஜர் மக்கீ** ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**'அந்த மனிதர் அக்கப்ரில் அடக்கப்பட்டுள்ள ஸாலிஹானவருடைய பரக்கத்தை பெறும்நோக்கத்திலும் அவரது சமீபத்துவத்தை பெற்றுக் கொள்ளும் எண்ணத்திலும் அவரது கப்ருக்கு அருகே ஒரு மஸ்ஜிதை கட்டி அதை கிப்லாவாக ஆக்காமல் அக்கப்ரை நோக்கி தொழாமல் இருப்பாராயின் இது இஸ்லாமிய மார்க்கச் சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்றல்ல. இ.வ்வாறு ஸாலிஹீன்களுடைய கப்ருக்கு அருகே மஸ்ஜித் கட்டலாம். 'லி குல்லிம்ரியின் மா நவா' இதனை மார்க்க சட்ட விற்பன்னர்களும், முஹத்திஸீன்களும், முபஸ்ஸிரீன்களும் உறுதிபடுத்தியுள்ளனர்.**

பாருங்கள்! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதமிகு கப்ரு ஷரீபுக்கு அருகே இறைவனின் கட்டளைப்படி ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது. அனைவரும் அந்த இடத்தை காலி செய்து விட அந்த இடம் முழுவதையும் மஸ்ஜிதோடு இணைக்கப்பட்டு விட்டது. ஆம். எந்த இடத்தில் அருமை நபியவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்களோ அந்த இடம் நிரந்தரமாகவே வணக்கத்திற்குரிய இடமாகிப் போய் விட்டது. இன்றுவரை பல நூற்றாண்டுகளாக அக்கப்ரை சுற்றி ஸாலிஹீன்களும், ஸலபு ஸாலிஹீன்களும் ஸலபுகளும், மஸ்ஜிதை விரிவுப்படுத்திக் கொண்டேதான் வருகின்றனர். அத்துடன் ஜியாரத்து செய்வோருக்காக அக்கப்ருக்கு மேலே அமைக்கப்பட்டுள்ள மேற்கூரையின் கீழ் நின்று குர்ஆனை ஓதி வருகின்றனர்.

(மேலும் ஸாலிஹீன்களுடை;ய கப்ரை எடுத்துக் கட்டுவதற்கு ஏன் இஸ்லாத்தில் அனுமதி வழங்கப்பட்டதெனில் அவர்கள் ஜனங்களால் அவமதிக்கபட்டு விடக் கூடாது என்பதற்காகவும், விவசாயி அந்த இடத்தை தோண்டிவிடக் கூடாது என்பதற்காகவும், அங்கே அடக்கப்பட்டிருப்பவர் யாரெனத் தெரியமால் வீடுகள் போன்றவை அவர்களுடைய கப்ரின் மீது கட்டப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவும் அனுமதிக்கப்பட்டது. இதனை ஷரீஅத் ஒரு போதும் தடை செய்யவில்லை.)

**(ஹட்வாடா) உறவினர்கள் அருகில் அடங்குதல்.**

பின்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹழ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரின் மீது ஒரு மிகப் பெரிய கல்லை ஊன்றி அடையாளம் வைக்கின்றனர். அத்துடன் நபியவர்கள், இக்கல்லை எனது சகோதரருடைய கப்ருக்கு அடையாளமாக வைக்கிறேன். பின்னர் எனது குடும்பத்தைச் சேர்ந்தோர் இவரது கப்ருக்கு பக்கத்தில் அடக்கம் செய்யப்படுவர் என்றும் கூறுகின்றனர். அதன்பின் அவர்களது கப்ருக்கு அருகே ஹழ்ரத் இப்னு முஹம்மத் இப்ராஹீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பத்து நபித்தோழர்களும் அந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டனர்.

لما مات عثمان بن مظعون اخرج بجنازة فدفن امر النبي صلي الله عليه وسلم رجلا أن يأتيه بحجر فلم

يستطع حملها فقام اليها رسول الله صلي الله عليه وسلم وحسر ذراعيه قال المطلب قال الذي يجبرني عن

رسول الله صلي الله عليه وسلم كأني انظر الي بياض ذراعي رسول الله صلي الله عليه وسلم حين حسر عنها

ثم حملها فوضعها عند رأسه فقال اعلم بها قبر اخي وادفن اليه من مات اهلي الف

**'ஹழ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வுலகை நீத்தபோது அவர்கள் அடக்கம் செய்யப்பட்டனர். அது போது நபியவர்கள் ஒருவரை அழைத்து அவரிடம் ஒரு கல்லை கொண்டு வருமாறு சொல்ல, அவர் சென்று ஒரு கல்லை தூக்க முயல, அது மிகவும் கனமாக இருந்ததால் அவரால் தூக்க முடியவில்லை. அதைக் கண்ட நபியவர்கள், தாமே சென்று தமது கை சட்டையை உயர்த்த அறிவிப்பாளர் கூறுகிறார், நபியவர்கள் தமது சட்டையை உயர்த்திய போது நான் அவர்களின் புஜத்தின் வெண்மையைப் பார்த்தேன். பிறகு அவர்களே அக்கல்லை தூக்கிக் கொண்டு வந்து ஹழ்ரத் உஸ்மானடைய கப்ரின் தலைப்பகுதியில் வைத்தனர். பின்னர் நபியவர்கள் அங்கிருந்தோரை நோக்கி, எனது சகோதரரின் கப்ருக்கு நான் அடையாளம் இடுகிறேன். என் குடும்பத்தில் யார் காலம் சென்றாலும் அவர்களை இவருடைய கப்ருக்குப் பக்கத்தில் தான் அடக்கம் செய்வேன் என்று கூறினர்.'**

-நூல்: மிஷ்காத் பாகம் 1, பக்கம் 149, அபூதாவூத் பாகம் 2, பக்கம் 101.

இதுபோன்றே ஹழ்ரத் செய்யிதா பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸையிதுஷ் ஷுஹதா ஹழ்ரத் ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரை ஸியாரத்துச் செய்வதற்காக உஹதுடைய மலைக்கு சென்று வந்து கொண்டிருந்தனர். அத்துடன் அவர்களின் கப்ரை அவ்வப்போது சரிப்படுத்தி கட்டியும் வந்தனர். அதன்பின் அக்கப்ரை தெரிந்து கொள்வதற்காக அக்கப்ருக்கு ஒரு கல்லை ஊன்றி அடையாளம் இட்டனர். அதன்பின் அங்கு சென்று தொழுது துஆவும் செய்து வந்தனர்.

இவ்வாறே ஹழ்ரத் அகீல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இல்லத்திற்குள் உம்முல் முஃமினீன்களை சேர்ந்த ஒருவரின் கப்ரு வந்த பின் அவர்கள் அந்த இடத்தை ஒரு கட்டிடம் கட்டி தனியாகப் பிரித்து விட்டனர். அத்துடன் அவர்களின் கப்ரையும் எடுத்தும் கட்டி விட்டனர். வரலாற்றாசியர்கள் இதுபற்றி வேறு சில காரணங்களைக் கூறுகின்றனர். அதாவது அக்கப்ருகளின் மீது கற்கள் ஊன்றப்பட்டிருந்ததாகவும், அதில் அவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் கூறுகின்றனர்.

**கப்ரைக் கட்டுவது பற்றி மார்க்க அறிஞர்களின் கருத்து**

மேலும் **துர்ருல் முக்தார்** என்னும் நூலில் பாமரர்களின் கப்ருகளை எடுத்துக் கட்டுவதை ஜாயிஸான ஒன்றெனக் கூறப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஸுலஹாக்கள், மஷாயிகீன்கள், உலமாக்கள் போன்றோரின் கப்ருகளை பெரிதாக்குவதும், எடுத்துக் கட்டுவதும் முபாஹான ஒன்றெனக் கூறுவதோடு ஜாயிஸான ஒன்றெனவும் பத்வா கொடுத்துள்ளனர். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதமிகு கப்ரு ஷரீபில் மேற்கூரை போடப்பட்டிருந்த போதுதான் அங்கே இரு நபித்தோழர்களும் அடக்கம் செய்யப்பட்டனர். இது நபித்தோழர் மற்றும் தாபியீன்களின் காலத்தில்தான் அமைக்கப்பட்டது. இன்னும் அதிலேயே இன்னொரு மேற்கூரையையும் கட்டினர். அதன்பின் இஸ்லாமிய கலீபாக்களும் காழிகளும் ஒன்று சேர்ந்து அவர்களுடைய கப்ருகளின் மீது கட்டிடங்களை எழுப்பினர். அது இன்றுவரை இருக்கிறது.

இன்னும் துர்ருல் முக்தாரில் கூறப்பட்டுள்ளதாவது...

قيل لا بأس به وهو المختار

'**அதில் எந்தத் தவறுமில்லை எனக் கூறப்பட்டுள்ளது. பின்னும் இதுதான் விரும்பத்தக்க ஒன்றுமாகும்.**' –நூல்: துர்ருல் முக்தார் பக்கம் 148.

**தகீரத்துல் உக்பா** என்னும் நூலில்...

وكره الآجر والخشب يعني في داخل اللحد بدليل ماذكره فخر الاسلام

'**கப்ரின் உட்புறத்தில் சுட்ட கல்¡யோ அல்லது காய்ந்த கட்டையையோ வைப்பது கூடாது என பக்ருல் இஸ்லாம் கூறுகின்றனர்.**'

**ஜாபிவுஸ் ஸகீர்** என்னும் நூலில் கூறப்பட்டுள்ளதாவது...

ولايكره الآجر علي الظاهر لان النبي صلي الله عليه وسلم وضع علي قبر ابن مظعون حجرا فقال لاعرف

به قبراخي.

**'கப்ருடைய வெளிப்பகுதியில் சுட்ட கல்லை வைப்பது மக்ரூஹல்ல. ஏனெனில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஸ்மான் பின் மழ்வூன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கப்ரின் வெளிப்புறத்தில் கல்லை ஊன்றியவர்கள் நான் எனது சகோதரருடைய கப்ருக்கு அடையாளம் இடுகிறேன் என்று கூறினர்.'**

இதுபோன்றே கப்ருக்கு உட்பகுதியில் சுட்ட கல்லை ஊன்றுவது மக்ரூஹாகும். அதற்கு மாறாக கப்ருக்கு வெளிப்பகுதியில் கல்லை ஊன்றுவதால் தவறேதும் இல்லை.

قال فخر الاسلام فان احتيج الي الكتابة حتي يذهب الاثر ولا يمتهن به فلا بأس به ايضا.

**'பக்ருல் இஸ்லாம் என்பார் கூறுகிறார், கப்ரின் மீது எழுதுவதால் எந்தத் தவறுமில்லை. இறந்து போனவர் தனது அடையாளம் மறைந்து விடக்கூடாது என விரும்பினால் அதனால் தவறேதும் இல்லை.'** -நூல்: துர்ருல் முக்தார் பாகம் 1 பக்கம் 148.

அடுத்து அல்லாமா முல்லா அலி காரி ரஹிமஹுல்லாஹு என்பார் ஷரஹு மிஷ்காத் என்னும் நூலில்...

وقد اباح السلف البناء علي قبر المشائخ والعلماء المشهوريين ليزورهم الناس وليسترحوا بالجلوس فيه

**'மஷாயிகீன்கன் மற்றும் பிரபலமான உலமாக்கள் போன்றோரின் கப்ருகளை சுற்றி கட்டிடம் எழுப்புவதை ஸலபுகள் முபாஹ் எனக் கூறுகின்றனர். காரணம் ஜனங்கள் அவர்களைஜியாரத்துச் செய்வதற்காகவும், அங்கே அமர்ந்து ஓய்வு எடுப்பதற்காகவும் கூடும் எனக் கூறுகின்றனர்.'** –நூல்: மிர்காத் ஷரஹு மிஷ்காத்.

இது போன்றே **கஷ்புல் ஃகதா** என்னும் நூலில்...

که مباح کرده اند سلف بنارا بر قبر مشائخ وعلماء مشهورین تا مردم
زیارت کنند واستراحت نمایند بجلوس در آں واگر از برائے

زینت کنند مکروه است در مدینہ مطہره بنائے قبہ ہا بر قبور اصحاب
در زماں پیش شده است ظاہر آنست کہ آں تجویز علماء آں وقت
باشد و بر مرقد منور آنحضرت صلی اللہ علیہ وسلم قبہ عالی است۔



www.sufimanzil.org

ஸலபுகள் மஷாயிகீன்கள் மற்றும் உலமாக்கள் போன்றோரின் கப்ருகளை சுற்றி கட்டிடம் எழுப்புவதை முபாஹ் எனக் கூறுகின்றனர். ஏனெனில் ஜனங்கள் அவர்களை ஜியாரத்து செய்வதற்காகவும், அங்கே அமர்ந்து ஓய்வு எடுப்பதற்காகவும் இது கூடும் எனக் கூறுகின்றனர். ஒருவேளை அக்கட்டிடம் அந்த இடத்தை அழகுப்படுத்தும் நோக்கத்தில் கட்டப்பட்டால் அது மக்ரூஹாகும். அவர்களது காலத்தில்தான் நபித்தோழர்களது கப்ருகளின் மீது குப்பாக்கள் கட்டப்பட்டன. இது அக்காலத்திய உலமாக்கள் ஜாயிஸ் எனக் கூறிய பின்னரே நடைபெற்றிருக்க வேண்டும். இன்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரு ஷரீபின் மீது மிகப்பெரிய குப்பா கட்டப்பட்டுள்ளது என்பதை கவனத்தில கொள்க.

**மதாரிஜுன் நுபுவ்வத்** என்னும் நூலில் அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி ரஹிமஹுல்லாஹ்....

درمطالب المؤمنین گفته است مباح داسته اند سلف که بنا کرده
شود بر قبر مشائخ وعلماء مشهور تا زیارت کنند ایشانرا مردم واستراحت
یابند در آں ونشیند در سایه آں نقل کرده است آنرا از مفاتیح شرح
مصابیح وگفته است که دیدم به بخارا قبور که عمارت کرده شده است

بخشتهاے تراشیده وتجویز کرده اند اسماعیل زاہد که از مشاہیر فقہاء است

**மதாலிபுல் முஃமினீன்** என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. மஷாயிகீன்கள் மற்றும் உலமாக்களின் கப்ருகள் மீது கட்டிடம் கட்டுவது முபாஹாகும். எதற்காக எனில், ஜனங்கள் ஜியாரத்து செய்வதற்காகவும், அந்த நிழலில் அமர்ந்து ஓய்வு எடுப்பதற்காகவும் கூடும். 'மிப்தாஹ் ஷரஹு மஸாபீஹ்' என்னும் நூலில், நான் புகாராவில் கப்ருகள் மீது கெட்டியான கட்டிடம் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன்.

இதனை இஸ்மாயீல் ஸாஹித் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஜாயிஸான ஒன்றெனக் கூறியிருந்தனர். இவர்கள் பிரபலமான சட்ட மேதைகளில் ஒருவராவர்.

**தர்காவில் மேற்கூரை அமைத்தல்**

மேலும் மய்யித் அடக்கம் செய்யப்பட்ட பின் கப்ரின் மீது மேற்கூரை அமைப்பது குறித்து புகாரி ஷரீப், மற்றும் ஐனீ, ஷரஹு புகாரி போன்ற நூல்களில் நபித்தோழர்களை கொண்டு அறிவிக்கப்படுகிறது....

مات الحكم ابن العاص في خلافة عثمان فضرب علي قبره فسطاس في يوم صائف فتكلم الناس في ذلك فقال

عثمان رضي الله عنه قد ضرب في عهد عمر علي زينب بنت جحش فسطاس فهل رأيتم عائبا عاب ذلك

**இன்னும் அல் இஸாபா ஃபீ அஹ்வாலிஸ் ஸஹாபா என்னும் நூலில், ஹழ்ரத் ஸையிதினா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் ஹகம் இப்னு ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மறைந்த போது அவர்களுடைய கப்ருக்கு மேல் வெயிலின் காரணமாக கொட்டகை அமைக்கப்பட்டபோது அதைக் கண்ட ஜனங்கள் ஒருவிதமாக பேசுவதைக் கேட்ட உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ,ஹழ்ரத் உமருடைய ஆட்சி காலத்தின் போது ஹழ்ரத் ஜைனப் பின்த்து ஜஹஷ் உடைய கப்ருக்கு மேல் கொட்டகை அமைக்கப்பட்டபோது யாராவது அதை மறுத்தார்களா? அல்லது குறை கூறுபவர் எவரேனும் அதைப்பற்றி குறை கூறியதை நீங்கள் கேட்டீர்களா எனக் கேட்டனர்.**

**சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை.**

ஹழ்ரத் மௌலானா அப்துல் ஹாமித் முக்ததர் பதாயூனி குத்திஸ ஸிர்ரஹு தமது நூலான 'அகாயிதே அஹ்லெ சுன்னத்' என்னும் நூலில், உம்தத்துல் காரி ஷரஹு புகாரி என்னும் நூலை ஆதாரமாகக் காட்டி எழுதுகின்றனர்.

وضرب عمر رضي الله عنه علي قبر زينب بنت جحش وضربه محمد بن الحنيفة علي قبر ابن عباس

**ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸைனப் பின்த் ஜஹஷ் உடைய கப்ருக்கு மேல் கொட்டகை போட்டனர். இவ்வாறே முஹம்மத் பின் ஹனீபா அவர்கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ருக்கு மேல் கொட்டகை அமைத்தனர்.**

மேலும் **அகாயிதே அஹ்லெ சுன்னத்தின்** ஆசிரியர் **ஐனீ** என்னும் நூலை ஆதாரப்படுத்தி எழுதுகின்றனர்...

ضرب افسطاس ان كان يغرض صحيح كالتستر من الشمس مثلا للاحياء لا ظلال الميت فقط جاز

**'மைய்யித்திற்கு நிழல் தரவேண்டும் என்ற நோக்கமின்றி ஜனங்களை வெயிலின் உஷ்ணத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கொட்டகை அமைக்கப்பட்டால் இது ஜாயிஸான ஒன்றாகும்.'** எனக் கூறுகின்றனர்.

அல்லாமா **ஸையித் முஹம்மத் அமீன்** குத்திஸ ஸிர்ரஹு என்பார் **துர்ருல் முக்தார்** என்னும் நூலில் கூறுகின்றனர்...

وفي الاحكام عن جامع الفتاوي وقيل لايكره البناء اذا كان الميت من المشائخ والعلماء والسادات

**'அஹ்காம் ஜாமிவுல் பதாவா என்னும் நூலில் கூறப்பட்டிருப்பதாவது, கப்ரைச் சுற்றி கட்டிடம் எழுப்புவது ஷைகுமார்கள், உலமாக்கள், ஸாதாத்துக்களின் கப்ருகளாயிருந்தால் மக்ரூஹில்லை.'** –நூல்: துர்ருல் முக்தார் பாகம்1, பக்கம் 601.

**கிலா∴ப் போர்வை போர்த்துதல்**

அல்லாமா அப்துல் ஹாமித் பதாயூனி குத்திஸ ஸிர்ரஹு அவர்கள் தமது அகாயிதே அஹ்லெ சுன்னத் என்னும் நூலில், தப்ஸீர் ரூஹுல் பயானை மேற்கோள் காட்டி எழுதுகின்றனர்....

فبناء القباب علي قبور الاولياء والصلحاء ووضع الستور والعمائم والثياب علي قبورهم امرجائزاذاكان القصد بذلك التعظيم

في اعين العامة حتي لايحتقر واصحاب القبر

**'வலிமார்கள், ஸாலிஹீன்கள் போன்றோரின் கப்ருகளின் மீது குப்பாக்களை கட்டுவதும், துணியிலான போர்வையை போர்த்துவதும் பாமரர்களின் பார்வையில் அவர்களின் மகத்துவத்தை எடுத்துக் காட்டும் நோக்கத்தில் இவை செய்யப்படுமாயின் இது ஜாயிஸான ஒன்றாகும்.'**

பதாயிவுஸ் ஸனாயி∴ என்னும் நூலில்...

ان عبد الله بن عبسا رضي الله عنهما لما مات بالطائف صلي عليه محمد بن الحنيفة وكبر عليه اربعا وجعل له لحدا وأدخله

من قبل القبلة وجعل قبره مسنما وضرب عليه فسطاطا

**'ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாயிபில் வைத்து அகாலமெய்திய போது முஹம்மத் பின் ஹனீபா அவர்கள் (ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மைந்தர்) நான்கு தக்பீர்களை கூறி தொழுதனர். அத்துடன் அவர்களுடைய கப்ரை அவர்களே தோண்டினர். அதன்பின் கிப்லாவின் பக்கமாக கீழே இறங்கினர். பின்னர் அக்கப்ரை ஒட்டகத்தின் முதுகைப் போன்று உயர்த்தியவர்கள் அக்கப்ருக்கு மேல் கொட்டகையும் அமைத்தனர்.'**

-நூல்: பதாயிவுஸ் ஸனாயி∴ ∴பீதர்தீபுஷ் ஷராயி∴ பாகம் 1, பக்கம் 320.

மேலும் ஸலபுஸ் ஸாலிஹீன்களுடைய ரிவாயத்துக்களையும் அவர்களின் நடவடிக்கைகளையும் பார்க்கும்போது கட்டிடங்களை கட்டக் கூடாது என்பதற்குரிய பாடத்தில் கப்ருகளை எடுத்துக் கட்டுவது ஹராமென்று கூறப்படவில்லை. அவ்வாறு இல்லையேல் அஸ்லாபுகள் அதை முபாஹ் எனக் கூறியிருக்க மாட்டார்கள். அத்துடன் கப்ருகளை எடுத்துக் கட்டுவதற்கும் உயர்த்திக் கட்டுவதற்கும் அனுமதித்திருக்க மாட்டார்கள். இனி எவரேனும் ஒரு

சட்டமேதை கப்ருகளை எடுத்துக் கட்டக் கூடாதுஎன்றோ அல்லது உயர்த்தக் கூடாது என்றோ கூறியுள்ளார் எனில், அது பெருமைக்காக அவ்வாறு செய்வது தான் கூடாதுஎனக் கூறியிருப்பார்.

இவ்வாறு கஷ்புல் ஃகதா, பஹ்ருர் ராயிக், பத்ஹுல் கதீர் போன்ற நூல்களில் இக்காரணங்கள் தான் கூறப்பட்டுள்ளது.

அடுத்து **ஸஃபருஸ் ஸஆதத்** என்னும் நூலில் ஹழ்ரத் அல்லாமா முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்...

در آخر زمان بجہت اقصار نظر عوام بر ظاہر مصلحت در تعمیر وترویج
مشاہد ومقابر مشائخ وعلماء دیدہ چیزہا افزودہ اند تا از انجا ابہت
وشوکت اہل اسلام وارباب صلاح پدید آید الی ان قال وبسا
اعمال وافعال واوضاع کہ در زمان سلف اومکروہات بود
در آخر زماں از مستحسنات گشتہ

**'தற்காலத்தில் பாமரர்களின் அறியாமையை காரணமாகக் கொண்டு ஷைகுமார்கள், ஸாலிஹீன்கள் போன்றோரின் கப்ருகளை எடுத்துக் கட்டுவதில் சில நுணுக்கங்கள் உள்ளன. அதாவது இதன் மூலம் இஸ்லாத்தின் கௌரவம் எடுத்துக் காட்டப்பட வேண்டும் என்பதோடு அங்கே அடங்கப்பட்டுள்ளவர்களின் கண்ணியமும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே இக்காலத்தில் நல்லோர்களின் கப்ருகள் எடுத்துக் கட்டப்படுகின்றன. மேலும் நிறைய அமல்கள் செயல்பாடுகள் போன்றவை எதையெல்லாம் ஸலபுகள் மக்ரூஹ் என நினைத்தார்களோ அவைகளெல்லாம் இப்போது விரும்பத்தக்க ஒன்றாக ஆகி விட்டன.'**

ஆக எந்தெந்த ஹதீஸ்களில் கப்ருகளை எடுத்துக் கட்டுதல் கூடாதெனக் கூறப்பட்டுள்ளதோ அந்த ஹதீஸ்களில் அவ்வாறு கூறப்பட்டிருப்பதற்குரிய நோக்கம் யாதெனில் எவ்வாறு யூதர்கள் தமது நபிமார்களின் கப்ருகளை வணக்கத்திற்குரிய ஸ்தலமாக ஆக்கினார்களோ இவ்வாறே தமது முன்னோர்களின் கப்ருகள் மீது பெரும் பெரும் கட்டிடங்களையும் மினாராக்களையும் அமைத்தார்களோ அது போன்று முஸ்லிம்கள் செய்யக் கூடாது என்பதற்காக கப்ருகள் மீது கட்டிடம் கட்டப்படுவது மறுக்கப்பட்டது. காரணம் அக்கட்டிடங்களை கொண்டு அங்கே அடக்கப்பட்டுள்ளவருக்கோ அல்லது அதை தரிசிக்க வருபவருக்கோ எத்தகைய பிரயோஜனமும் கிடையாது.

மாறாக இது வீண் செலவும் பெருமைக்காகவும் செய்யப்படுகிற ஒன்றாகும். உதாரணமாக மிஸ்ரில் நான்கு மினாராக்களை கொண்ட கிறிஸ்துவர்களின் கப்ருகள் இருக்கின்றன. அதற்கு மாற்றமாக நாம் செயல்பட வேண்டுமெனவும், இல்லையேல் நாம் அவர்களை

www.sufimanzil.org

பின்பற்றியவர்களாகி விடுவோம் எனக் கூறி முஸ்லிம்களை ஏமாற்றுவது அவர்களை தவறான பாதைக்கு திருப்பி விட்டுவிடக் கூடும். ஆதலால் இதைத்தான் ஸலபுகள் கூடாதென மறுத்தனர்.

**கப்ரை கட்டுவது குப்ரோ ஷிர்க்கோ அல்ல.**

அவ்வாறின்றி கப்ருகளை எடுத்துக் கட்டுவதை ஷிர்க்கென்றோ அல்லது குப்ரென்றோ சொல்லப்படுமாயின் நபியவர்களின் உம்மத்துக்கள் அனைவரும் லஃனத்துக்கு உரியவர்களாகி விடுவர். மேலும் ஹதீதில் கூறப்படும் '**லா தஜ்தமிவு உம்மதீ அலல் ழலாலதீ**' (எனது உம்மத்துக்கள் வழிகேட்டில் ஒருங்கிணைய மாட்;டார்கள்) எனக் கூறப்பட்டது அர்த்தமற்ற ஒன்றாக ஆகிப்போய் தவறான அர்த்தத்தை கொடுக்கக் கூடிய ஒன்றாக ஆகிவிடும். நவூது பில்லாஹி மின் ஸூயில் இஃதிகாதி வல்லாஹு தஆலா அஃலம் வ அல்லமஹு அதம்மு வ அஹ்கம்.

**வஹ்ஹாபிகளின் பார்வைக்கு....**

**உண்மைபடுத்துதல்**

வல்லாஹு ஹக் ஹக் ஹக்

நான் அல்லாஹ்வுடைய பேரருளால் மக்காவில் ஐந்து ஆண்டுகள் வரை தங்கி இருந்தேன். அதில் சில காலம் துருக்கியரின் ஆட்சியே நடைபெற்று வந்தது. அதிகமான காலம் ஷரீப் ஹுஸைனின் ஆட்சிதான் நடைபெற்றது. அப்போது உலகின் பல பாகங்களிலிருந்து பல உலமாக்கள் ஹஜ்ஜுக்காக வேண்டி வருகை தந்தனர். அவர்களில் எந்த முகல்லித் ஆலிமும் அங்கே கட்டப்பட்டிருந்த குப்பாக்களையோ அல்லது கப்ருகளையோ தவறானதென்று சொல்லவே இல்லை.

நாடு விடுதலை அடைந்த பிறகு கூட வெளியில் இருந்து வருகை தந்த உலமாக்களோ அல்லது உள்ளூரில் இருந்த உலமாக்களோ யாருமே ஜன்னத்துல் முஅல்லாவில் இருந்த கப்ருகளோ அல்லது அதன் மீது கட்டப்பட்டிருந்த குப்பாக்களோ அல்லது மஸ்ஜிதுல் ஜின், மஸ்ஜித் ஜபல், அபூ குபைஸ் போன்றவைகளையோ ஷரீஅத்திற்கு மாற்றமானவை எனக் கூறவில்லை. இதிலிருந்து அவர்களின் ஒருங்கிணைப்பும் பொருந்திக் கொண்ட நிலையும் நமக்குத் தெளிவாகிறது.

இதுபோன்றே நான் ஹிஜ்ரி 1312லும் ஹிஜ்ரி 1329லும் ஸியாரத்திற்காக வேண்டி மதீனா முனவ்வராவிற்கு சென்றபோது அங்கே இந்தியா, ஷாம், மற்றும் மஃரிப் தேசத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் இருந்தனர். அவர்களும் அங்கிருந்தமஸ்ஜிதுகளையும், ஜன்னத்துல் பகீயில் இருந்த குப்பாக்களையும் ஸியாரத்துச் செய்தனர். அவர்களில் யாருமே இது கூடாதெனக் கூறவில்லை.

ஆம். நமது ஹரமைனுடைய உலமாக்கள் வருகை தந்திருந்த உலமாக்களைப் பற்றி தவறாக எண்ணிக் கொண்டு ஏதோ ஒரு காரணத்திற்காக ஷரீஅத்துடைய சட்டத்தை கூறுவதற்குப் பதிலாக மௌனம் சாதித்து விட்டனர் என நாம் நினைத்துக் கொள்வோமாயின் இதற்கு எந்த பதிலும் கிடையாது. மற்றபடி மார்க்கத்தில் எவை எவை தடை செய்யப்பட்டுள்ளதோ அவற்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**சவூதி ஆட்சி இஸ்லாமிய ஆட்சி அல்ல.**

அத்துடன் இன்று இஸ்லாமிய ஆட்சி மறைந்து விட்ட காரணத்தால் ஒவ்வொருவரும் அவரவருக்குத் தோன்றியவாறு எல்லாம் எழுதத் துவங்கி விட்டனர். எது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதோ அதெல்லாம் ஹதீதுக்கு மாற்றமானவை எனக் கூறுகின்றனர். சிலபோது இது இமாம் அபூஹனீபா உடைய சொல்லுக்கு மாற்றமானது என்கின்றனர்.

இன்னும் சிலர் இந்த குப்பாக்கள் கப்ருகள் எல்லாமே மாற்று சமுதாயத்தினரின் நகல்கள் எனக் கூறுகின்றனர். நம்ப முடியவில்லை. ஜனங்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக இப்படியெல்லாம் பேசித் திரிகின்றனர். இவர்களில் யார் ஹஜ்ஜுக்கு செல்கிறார்களோ அவர்கள் கொஞ்சம் உஷாராகின்றனர். அங்குள்ள முஜாவர்கள், பாதுகாப்பாளர்கள் ஹஜ்ஜு செய்ய வரும் ஹாஜிகளிடம் எப்போதும் எதுவும் கேட்பதில்லை. ஒருவேளை ஹாஜிகள் அவர்கள் கேட்காமலேயே எதுவும் அவர்களுக்குக் கொடுத்தால் அதை வாங்கிக் கொள்வதில் தவறேதும் இல்லை. முஸ்லிம்கள் தங்களுடைய ஈமானையும் அகீதாவையும் அவர்கள் கூறுவதைக் கேட்டு தவறான வழியில் போய்விட வேண்டாம். மாறாக இத்தகையோரின் சகவாசத்திலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

فقط هذا ماعندي والله اعلم باصواب حرره مشتاق احمد خادم الطابة في المدرسة الصولتية مكه مكرمه

سابقا حال وارد بدايون مدرسه شمس العلوم صح الجواب والله تعالي اعلم

## இரு ஹதீஸ்களுக்கு தமிழாக்கியோனின் விளக்கவுரை

**நபியவர்கள் கப்ருகளை இடிக்கச் சொன்னார்களா?**

شا احمد بن بشر التستري ابوحفص شا احمد بن محمد بن العمار الرازي شا اسحاق بن سليمان الرازي شا

المفضل بن صدقة ابوحماد الحنفي عن ابي الهياج الاسدي قال بعثي علي بن ابي طالب فقال اتدري ما

ابعثك وابعثك علي ما بعثي عليه رسول الله صلي الله عليه وسلم قال لاتدع تمثالا الا كسرته ولا قبرا مسنما

الا سويته لم يروه عن الن اسحاق الا المفضل ولا عنه الا اسحاق الرازي تفرد به محمد بن عمار

**'ஹழ்ரத் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கூறினர், அதாவது அண்ணலெம்பெருமானார் முஹம்மமத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கூறினர், எந்த உருவப் படத்தைக் கண்டாலும் அதை உடைத்தெறியாமல் விட்டு விடாதீர். இவ்வாறே எந்தவொரு கப்ரும் உயரமாக இருக்க வேண்டாம். அதை சமப்படுத்தி விடுங்கள்'** எனக் கூறினர். நூல்: அல் முஃஜமுஸ் ஸகீர் தப்ரானி பக்கம் 29.

இந்த ஹதீஸ் குறிப்பிடப்படும் 'ஸவ்வைதுஹு' என்பதற்கு இமாம் ஷாபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கப்ரு ஒட்டகத்தின் முதுகைப் போல் இருக்காமல் அதை 'தட்டையாக்கி விடுதல்'; என்பதாகும். ஆனால் இப்னு தைமிய்யா கூறுவதைப் போல கப்ருகளை 'இடித்தெறிதல்' என்பது அர்த்தமாகாது.

**இதற்கு குர்ஆன் தரும் ஆதாரத்தைப் பாருங்கள்.**

ஸவ்வைதுஹு என்பது பற்றி குர்ஆன்.

ثم استوي الي السمآء فسواهن سبع سموات

**'பின்பு வானத்தின் பக்கமாக இறைவன் தனது கவனத்தை திருப்பிய போது அதனை ஏழு வானங்களாக முறைப்படுத்தினான்.'** –அல்குர்ஆன், பகரா வசனம் 3.

فاذا سويته ونفخت فيه من روحي فقعواله ساجدين

**'இனி நான் ஆதமை(அலைஹிஸ்ஸலாம்) படைத்து அவரை செம்மைப் படுத்தி எனது ஆன்மாவை அவருக்குள் ஊதியபின் அவருக்கு ஸுஜூது செய்ய வேண்டும்.'**

-அல்குர்ஆன் ஹஜ்ர் வசனம் 14.

ஆக மேற்கண்ட ஹதீதிலும் குர்ஆனுடைய இரு வசனங்களிலும் '**ஸவ்வைதுஹு**' '**ஸவ்வாஹுன்ன**' என்னும் வாக்கியங்கள் தரைக்கு மேல் உயர்த்தப்பட்டுள்ள கப்ருகளை '**சரிப்படுத்துதல்**' '**முறைப்படுத்துதல்**' '**செவ்வையாக்குதல்**' என்பதுதான் அர்த்தமாகுமே அன்றி இப்னு தைமிய்யாவும் அவரை பின்பற்றும் இன்றைய வஹ்ஹாபிகளும் கூறுவது போல் தனரைக்கு மேலே உயர்த்தப்பட்டுள்ள கப்ருகளை 'இடித்தெறிதல்' என்பது அர்த்தமாகாது.

இனி மேற்கண்ட ஹதீதை நபியவர்கள் யாரிடம் கூறுகின்றனர்? ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கூறுகின்றனர். சிறிது யோசித்துப் பாருங்கள். பல்லாயிரக்கணக்கான நபித்தோழர்கள் இருக்கும் போது அருமை நபியவர்கள் குறிப்பாக கப்ருகளை குறித்த

விஷயத்தில் ஹழ்ரத் அலியவர்களிடம் மட்டும் ஏன் கூற வேண்டும்? வேறு தோழர் யாரிடமாவது இப்பொறுப்பை கொடுத்திருக்கலாம் அல்லவா! நபியவர்கள் அவ்வாறு செய்யாமல் ஹழ்ரத் அலியவர்களை மட்டும் அழைத்து அவர்களிடம் 'உருவப் படங்களை கண்டால் அவற்றை சிதைக்காமல் விட்டு விடாதீர். இது போன்றே தரைக்கு மேலே உயர்த்தப்பட்டுள்ள கப்ருகளை சரிப்படுத்துங்கள் அல்லது முறைப்படுத்துங்கள்' எனக் கூறியதற்கு காரணம்....

**கப்ருகளை இடிக்க அலியவர்களை தேர்ந்தெடுத்தது ஏன்?**

ஹழ்ரத் அலியவர்களுக்கு பல காரணப் பெயர்களுண்டு. அவற்றில் 'அபூதுராப்' என்றொரு காரணப் பெயரும் அவர்களுக்கு உண்டு. அபூதுராப் என்றால் 'மண்ணின் தந்தை' என்பது பொருளாகும். எல்லா மனிதர்களும் மண்ணுக்கு மேலே என்னஇருக்கிறது என்பதை எவ்வாறு தெளிவாக பார்க்கிறார்களோ அவ்வாறு ஹழ்ரத் அலியவர்கள் மண்ணுக்கு கீழே என்ன இருக்கிறது என்பதை பார்க்கும் ஆற்றலை கொண்டிருந்தவர்கள்.

இந்நிலையில் நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்துச் செய்து வருவதற்கு முன் மதீனாவில் யூதர்களும் இருந்தனர். கிறிஸ்துவர்களும் இருந்தனர். இந்த யூத, கிறிஸ்துவர்களும் இஸ்லாமியர்களைப் போல தங்களில் இறந்து போவோரை மண்ணில் புதைத்து அவர்களின் மண்ணறைகளுக்கு மேல் கல்லறைகளை கட்டி அவர்களின் உருவப் படங்களை ஓவியங்களாக தீட்டி அக்கல்லறைகளின் தலைமாட்டில் மாட்டி வைத்திருந்தனர்.

இத்தகைய சூழ்நிலையில் நபியவர்கள் மதீனாவுக்கு வந்து சேர்ந்த பின் நபியவர்களை விசுவாசித்த விசுவாசிகளில் ஒருவர் பின் ஒருவராக காலம் செல்ல அவர்களையும் நபியவர்கள் மண்ணில் அடக்கம் செய்கின்றனர். அந்த நிலையில்தான் நபியவர்கள் தமது தோழர்கள் யாரும் கப்ருகளை ஸியாரத்துச் செய்யக் கூடாது என்று தடை செய்கின்றனர்.

பின்னர் யூதர்களும், கிறிஸ்துவர்களும் நபியவர்களுக்குச் செய்த துரோகத்தின் காரணமாக அவர்கள் அனைவரும் மதீனாவை விட்டும் வெளியேற்றப்படுகின்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற சில மாதங்களுக்குப் பின் நபியவர்கள் ஹழ்ரத் அலியவர்களை அழைத்து 'உருவப்படங்களை கண்டால் அவற்றை சிதைக்காமல் விட்டு விடாதீர்'. அதாவது இறந்து போனவர்களின் உருவங்களை ஓவியங்களாக தீட்டி மாட்டி வைத்துள்ள கப்ருகள் அனைத்தையும் இடித்து தரைமட்டமாக்கி விடுங்கள். ஏனெனில் அவைகள் முஸ்லிம்களுடைய கப்ருகள் அல்ல என்பதைத் தான் நபியவர்கள் சூசகமாக உருவப் படங்களை கண்டால் அவற்றை சிதைக்காமல் விட்டு விடாதீர் எனக் கூறினர்.

இவ்வாறே உருவப்படங்கள் இல்லாதிருந்த கப்ருகளில் அடக்கம் செய்யப்பட்டிருப்போர் முஸ்லிம்களா? அல்லது யூதர்களா? அல்லது கிறிஸ்துவர்களா? என்பதை எல்லாம் மண்ணுக்கு கீழே இருப்பதையும் பார்க்கும் ஆற்றலை கொண்டிருக்கும் அலியே அக்கப்ருகளில்

முஸ்லிம்களின் கப்ருகளைத் தவிர மற்றவர்களின் கப்ருகளை எல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கி விடுங்கள். அப்போது தான் எனது சமூக மக்கள் கப்ருகளை ஸியாரத்துச் செய்யப் போகும் போது முஸ்லிம்களுடைய கப்ருகளை மட்டும் ஜியாரத்துச் செய்ய முடியும் என்னும் கருத்தை தான் கப்ருகளை சரிப்படுத்துங்கள் அல்லது முறைப்படுத்துங்கள் என்னும் வார்த்தையை கொண்டு கூறுகின்றனர்.

இதில் நபியவர்களின் ஆணைக்கேற்ப ஹழ்ரத் அலியவர்கள் யூத, கிறிஸ்துவர்களின் கப்ருகளை எல்லாம் இடித்துத் தரை மட்டமாக்கி விட்டு முஸ்லிம்களின் கப்ருகளை மட்டும் ஸியாரத்துக்கு தகுதியுள்ளவைகளாக மாற்றி அமைத்தனர். இதன் பின்னரே நபியவர்கள் தமது தோழர்களை நோக்கி...

**இரண்டாம் ஹதீஸ்**

عن ايس بن مالك قال قال رسول الله صلي الله عليه وسلم كنت نهيتكم عن زيارة القبور الافزوروها فانه يرق

القلب وتدمع العين وتذكر الآخرة ولا تقولوا هجرا

**'ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர். நபிகள் பெருமான் முஹம்மமத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர், முன்னர் நான் உங்களை கப்ருகளை ஸியாரத்துச் செய்வதை தடை செய்திருந்தேன். இப்போது கப்ருகளை நீங்கள் ஜியாரத்துச் செய்யுங்கள். ஏனெனில் கப்ருகளை ஜியாரத்துச் செய்வதால் உள்ளம் இளகுகின்றது. கண்கள் கண்ணீரை பொழிகின்றன. இன்னும் மறுமை நினைவுக்கு வருகின்றது. எனவே ஸியாரத்துச் செய்வதை விட்டு விடாதீர்கள்'** எனக் கூறினர். –நூல்: முஸ்தத்ரக் பாகம்1, பக்கம் 377.

தடை செய்யப்பட்டிருந்த கப்ரு ஸியாரத்தின் தடையை நபியவர்கள் நீக்கி விட்டனர் என்பதற்குரிய இன்னொரு ஆதாரத்தையும் பாருங்கள்....

عن عبد الله بن ابي ملكية ان عائشة اقبلت ذأت يوم من المقابر فقلت هايا ام المؤمنين من اين اقبلت قالت من

قبر اخي عبد الرحمن بن ابي بكر فقلت لها اليس كان رسول الله صلي الله عليه وسلم نهي عن زيارة القبورة

قالت نعم كان نهي ثم امر بزياتها

**'அப்துல்லாஹ் பின் அபீ மில்கிய்யா என்பார் அறிவிக்கின்றனர், ஒரு நாள் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கப்ரஸ்தானில் இருந்து வந்து**



www.sufimanzil.org

**கொண்டிருப்பதை கண்ட நான், அன்னையே! எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்க, அதற்கவர்கள், எனது சகோதரர் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்கருடைய கப்ரிலிருந்து எனக் கூற, அது கேட்ட நான், என்ன?நபியவர்கள் கப்ரை ஸியாரத்துச் செய்வதை தடை செய்யவில்லையா? என்று வினவ, அதற்கவர்கள், ஆம். முன்பு தடை செய்திருந்தனர். ஆனால் அத்தடையை பின்னர் நீக்கி கப்ரை ஸியாரத்துச் செய்யுமாறு கட்டளை இட்டுள்ளனர் எனக் கூறினர்.'** -நூல்: முஸ்தத்ரக், பாகம் 1, பக்கம் 376.

ஆக **'ஸவ்வைதுஹு'** என்னும் வாக்கியத்திற்குள் **'சரிப்படுத்துதல்' 'முறைப்படுத்துதல்' 'சமப்படுத்துதல்'** என்னும் கருத்துக்கள் மட்டுமின்றி **'இடித்தல்'** என்றொரு கருத்தும் இருப்பதால் இப்னு தைமிய்யா போன்றோர் மற்ற கருத்துக்களை எல்லாம் விட்டு விட்டு இடித்தல் என்னும் கருத்தை மட்டும் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு நபியவர்கள் யூத, கிறிஸ்துவ, இஸ்லாமியர் போன்ற அனைவரின் கப்ருகளையும் இடிக்கச் சொன்னார்கள் என ஒரு தவறான கருத்தை ஸவ்வைதுஹு என்னும் வார்த்தைக்கு கொடுத்து நபியவர்களால் சொல்லப்படாத முஸ்லிம்களின் கப்ருகளையும் மற்றவர்களின் கப்ருகளோடு இணைத்துக் கொண்டனர்.

இதனை புரிந்து கொள்ளாத வஹ்ஹாபிகளும் இப்னு தைமிய்யாவின் கருத்தைக் கொண்டு கப்ருகளை தரைக்கு மேல் உயர்த்தக் கூடாது. அவ்வாறு உயர்த்தப்பட்டிருந்தால் அவைகளெல்லாம் இடிக்கப்பட வேண்டும் என நபியவர்களே கூறுகின்றனர் என நபியவர்கள் சொல்லாத ஒன்றை அபாண்டமாக நபியவர்கள் மீது இப்போது சுமத்தி வருகின்றனர்.

**கப்ரு ஸியாரத்தும் சிலை வணக்கமும் ஒன்றா?**

இந்த வஹ்ஹாபிகள் தமது கூற்றுக்கு இன்னொரு ஆதாரத்தையும் நம்முன் வைக்கின்றனர். அதாவது, இறந்து போன நல்லோரின் கப்ருகளை கொண்டுதான் சிலை வணக்கம் என்பதே காலப்போக்கில் தோன்றியது. இதற்கு ஆதாரம் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலத்திற்குப் பின் வாழ்ந்த ஐந்து நன்மக்களின் கப்ருகள் தான் காலப்போக்கில் சிலை வணக்கத்திற்கு உரியவைகளாக ஆக்கப்பட்டன எனக் கூறுகின்றனர். இது மாபெரும் இமாலயத் தவறாகும் என்பதோடு இது இஸ்லாமிய மக்களை வழிகேட்டின் பக்கம் திசை திருப்பும் ஒரு முயற்சியுமாகும்.

புகாரி ஷரீப் என்னும் நபி மொழி நூலில் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டு அறிவிக்கப்படும் ஒரு ஹதீஸில்,

ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்,...

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களின் மக்கள் அவ்வைந்து நன்மக்களிடமும் வருகை தந்து தங்களின் பிரச்சனைகளை கூறி அவைகளுக்கு தீர்வு கண்டு வந்தனர். இந்நிலையில் அவர்களில் ஒருவருக்குப் பின் ஒருவராக இவ்வுலகை விட்டு

அவர்களும் மறைந் து போக அம்மக்கள் தங்களின் பிரச்சனைகளை இனி யாரிடம் சொல்லித் தீர்வு காண்பது என யோசித்துக் கொண்டிருந்த போது இப்லீஸ் அவர்களிடம் வந்து அவர்களின் உருவங்களை சிலைகளாக வடிவமைத்து அச்சிலைகளுக்கு முன் உங்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறி தீர்வு கண்டு கொள்ளுங்கள் எனக் கூற...

அவன் கூறியதைக் கேட்ட அம்மக்கள் ஐந்து சிலைகளை வடிவமைத்தனர். அதில் ஒன்று ஆணுடைய தோற்றத்திலும், மற்றொன்று பெண்ணுடைய தோற்றத்திலும்,

இன்னொன்று குதிரையின் தோற்றத்திலும், அடுத்தது மாட்டுடைய தோற்றத்திலும் ஐந்தாவது சிலை நந்தியுடைய தோற்றத்திலும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவ்வைந்து நன்மக்கள் தான் சிலைகளாக வடிவமைக்கப்பட்டனர் எனில் அவ்வைந்து பேரும் ஆண்களாக இருந்தவர்கள். இதில் மாடு, குதிரை, நந்தி போன்ற உருவங்கள் எங்கிருந்து வந்தன?

ஆக அவ்வைந்து நன்மக்களுக்கும் சிலை வணக்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது நமக்குத் தெளிவாகிறது. இச்சம்பவத்தை கொண்டு கப்ருகள் சிலை வணக்கத்திற்கு காரணமாக அமைந்து விடும் எனக் கூறுவது முழுக்க முழுக்க உண்மைக்கு மாற்றமான ஒரு சொல்லாகும்.

இங்கே நாம் இன்னொன்றையும் யோசித்துப் பார்க்க வேண்டும். கப்ருகள்தான் சிலை வணக்கத்திற்கு முன்னோட்டமாக அமையும் என்றிருந்தால் தடை செய்யப்பட்டிருந்த கப்ரு ஸியாரத்தை நபியவர்கள் மீண்டும் ஏன் அனுமதித்தனர்? இன்றும் கூட இந்திய மண்ணிலும் அரபுலகிலும் எத்தனை லட்சக்கணக்கான வலிமார்களின் கப்ருகளை நாம் பார்க்கிறோம்! அவைகளில் ஒரு கப்ராவது வணக்கத்திற்குரிய பொருளாக ஆக்கப்பட்டுள்ளது என்பதை இந்த வஹ்ஹாபிகளால் காட்ட முடியுமா?

எனவே நபியவர்கள் கப்ருகளை எல்லாம் இடிக்கச் சொன்னார்கள் என எவராவது சொன்னால் அவர் சமூக மக்களை வழிகேட்டின் பக்கம் திசை திருப்ப முனைகிறார் என்பதை புரிந்து கொண்டு இஸ்லாமிய சகோதர்கள் அதிகமதிகம் தமது முன்னோர்களின் கப்ருகளையும் வலிமார்கள், நபிமார்கள், ஸாலிஹீன்கள், உலமாக்கள் போன்றோரின் கப்ருகளையும் சென்று ஜியாரத்துச் செய்வதை வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். காரணம் ஜியாரத்து உங்களின் ஆன்மாவை புத்துயிர் பெறச் செய்து, மறுமையை நினைவூட்டி உங்களுக்கு இறை சமீபத்துவத்தை பெற்றுத் தரும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

**மூன்று பள்ளிகளுக்கு மட்டும் தான் பயணம் செல்ல வேண்டுமா?**

அடுத்து இப்னு தைமிய்யாவால் திரிபுக்கு உட்படுத்தப்படும் மற்றோர் ஹதீஸாவது...

لا تشد الرحال الا ثلاثة مسجدا

**'மூன்று மஸ்ஜிதுகளை தவிர அதிகமான நன்மையை கருதி வேறு மஸ்ஜிதுக்கு நீங்கள் செல்ல வேண்டாம் என ஏந்தல் நபி முஹம்மமத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.'**

இந்த ஹதீதில் சுட்டிக் காட்டப்படும் மூன்று மஸ்ஜிதுகள் என்பது **'பைத்துல் முகத்தஸ்' 'மஸ்ஜிதுன் நபவி' 'மஸ்ஜிதுல் ஹராம்'** ஆகியவைகளாகும். ஆனால் இப்னு தைமிய்யா மூன்று மஸ்ஜிதுகளை தவிர வேறு எந்தக் கப்ருகளுக்கும் செல்லக் கூடாதென நபியவர்கள் தடை செய்கின்றனர் என ஹதீஸில் சொல்லப்படாத கப்ரு என்னும் வாக்கியத்தை இவராகவே இணைத்துக் கொண்டு விளக்கம் தருகிறார். இதுவும் இஸ்லாமிய மக்களை வழிகேட்டின் பக்கம் திசை திருப்பும் ஒரு முயற்சியே.

அதிகமான நன்மையை கருதி என்னும் வார்த்தை மட்டும் இல்லாமல் வெறுமனே மூன்று மஸ்ஜிதுகளைத் தவிர வேறு மஸ்ஜிதுகளுக்கு செல்ல வேண்டாமென நபியவர்கள் கூறியிருந்தாலும் கூட ஹதீஸின் வாக்கியம் மஸ்ஜிதைத் தான் குறிப்பிடுகிறதே அன்றி கப்ருகளை குறிப்பிடவில்லை. இந்நிலையில் இவராகவே கற்பனை செய்து கொண்டு கப்ரு என்னும் வார்த்தையை சேர்த்துக் கொண்டு பேசுகிறார் எனில் இது நபியவர்களின் மீது சுமத்தப்படும் பழியாகும் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒருவேளை அதிகமான நன்மையை கருதி என்னும் வாக்கியத்தை நீக்கி விட்டு மூன்று மஸ்ஜிதுகளை தவிர வேறு எங்குமே செல்லக் கூடாது என சொல்லப்பட்டிருந்தால் இது சாத்தியத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகப் போய் விடும். காரணம் வியாபாரத்திற்காக ஒருவர் வெளியூருக்கு செல்வதாக இருந்தால் அல்லது ஒரு திருமணத்திற்கு செல்வதாக இருந்தால் அல்லது ஒரு நண்பரை பார்க்க செல்வதாக இருந்தால் இவ்வாறு எந்தவொரு காரியத்திற்காகவும் வெளியூருக்கு ஒருவரால் செல்ல முடியாது. எனவே இது அசாத்தியமான விஷயமாகும்.

ஆதலால் இப்னு தைமிய்யா n சால்வதைப் போல நன்மையை கருதி ஒரு வலியுடைய கப்ருக்குச் சென்று ஸியாரத்துச் செய்வதற்காக மட்டும் வெளியூருக்கு செல்லக் கூடாதென அவர் கூறுவது அவருடைய கற்பனையில் விளைந்த ஒரு புதிய சித்தாந்தமாகுமே அன்றி இது இஸ்லாமிய மார்க்கத்தில் சொல்லப்பட்ட ஒன்றல்ல என்பதை நமது சகோதர பெருமக்கள் விளங்கிக்கொண்டு கப்ருகளை ஸியாரத்துச் செய்வதற்காக வெளியூர்களுக்கு செல்வதை நபியவர்கள் கூறுகின்றனர் எனக் கூறுவது உண்மைக்கு முற்றிலும் முரணான ஒரு சொல்லாகும் என்பதையும் நாம் தெரிந்து கொண்டு ஸியாரத்திற்காக மட்டுமல்ல. வேறு எந்த நல்ல காரியத்திற்காகவும் நாம் வெளியூர்களுக்கு செல்லலாம் என்பதை நம் சமூக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் மஸ்ஜிதை கப்ருகள் என மாற்றி தவறான அர்த்தத்தை முதன் முதலில் இப்னு தைமிய்யா என்பவர் கொடுத்திருந்தாலும் அவரை பின்பற்றி எத்தனை நபர்கள் இதே கருத்தை கூறுகின்றனர் என்பதையும் பாருங்கள்...

**நபியவர்களின் கப்ரை ஜியாரத் செய்வதற்குரிய சட்டம்.**

**'மார்க்க கல்வி கற்பதற்காகவோ அல்லது வேறு முக்கியமான காரியத்திற்காகவோ பயணம் செய்வது கூடும். ஆனால் அதேநேரம் எங்கே நபியவர்களின் கப்ரு இருக்கிறதோ அந்த இடத்தை நோக்கி பயணம் செய்வது கூடாது. ஒரு வேளை மஸ்ஜிதுன் நபவியை நோக்கி பயணம் செய்யும் நிய்யத்தோடு சென்றபின் நபியவர்களின் கப்ரை ஸியாரத் செய்தால் அதனால் எவ்வித பாதகமுமில்லை. ஆம். அந்த எண்ணத்தில் தான் பயணம் செய்ய வேண்டும்.** -நூல்: மஸ்அலா ஸியாரதே கப்ரெ நபவி. ஆசிரியர்: ஹாபிஸ் அப்துல்லாஹ் அமிர்தசரஸ்.

அடுத்து வஹ்ஹாபிகளின் இன்னொரு கூற்றையும் பாருங்கள்....

وفي الحديث دليل علي منع شد الرحال الي قبره صلي الله عليه وسلم والي غيره من القبور والمشاهد لان ذلك

من اتخاذها اعيادا بل من اعظم اسباب الاشراك باصحابها وهذه هي المسئلة التي افتي فيها شيخ الاسلام اعني

من سافر لمجرد زيارة قبور الانبياء والصالحين

**'மேலும் ஹதீதில் வந்துள்ள ஆதாரம் என்னவெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரை நோக்கியோ அல்லது மற்றவர்களின் கப்ரை நோக்கியோ ஒரு விழா எடுப்பதை போல பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. காரணம் இவர்கள் கப்ருகளை ஈதாக (பெருநாளாக) ஆக்குகின்றனர். இது ஷிர்க்குக்கு உரிய காரணங்களில் மாபெரும் காரணமாகும். பின்னும் இச்சட்டம் குறித்து இப்னு தைமிய்யா பத்வா கொடுத்துள்ளார். அதாவது யார் நபிமார்களின் கப்ருகளை மட்டும் ஸியாரத்துச் செய்யும் எண்ணத்தோடு பயணம் செய்கிறாரோ அவர் ஷிர்க் செய்தவராகும்.'**

-நூல்: பத்ஹுல் மஜீத் ஷரஹு கிதாபுத் தௌஹீத்.

பார்த்தீர்களா! இந்த வஹ்ஹாபிகள் (தப்லீக், காதியானி, ஜமாஅத்தே இஸ்லாமி, அஹ்லெ ஹதீஸ், அஹ்லெ குர்ஆன், சிமி, தௌஹீது வாதிகள்) அனைவரும் ஒட்டு மொத்தமாக ஒன்று சேர்ந்து நபிமார்களோ அல்லது வலிமார்களோ அல்லது ஸாலிஹீன்களோ அல்லது உலமாக்களோ யாராக இருந்தாலும் ஏன் ! முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்பட ஸியாரத்துச் செய்வதற்காக என்ற எண்ணத்தில் மட்டும் பயணம்

செய்வதை ஷிhக்; என்று கொஞ்சமும் நாகூசாமல் கூறுகின்றனர். ஆனால் இறைவன் என்ன கூறுகிறான் தெரியுமா?

وَإِذَا قِيلَ لَهُمْ تَعَالَوْا يَسْتَغْفِرْ لَكُمْ رَسُولُ اللهِ لَوَّوْا رُءُوسَهُمْ وَرَأَيْتَهُمْ يَصُدُّونَ وَهُم مُّسْتَكْبِرُونَ

**'உங்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக வாருங்கள் ரஸூலுல்லாஹ்விடம் என அவர்களுக்கு சொல்லப்பட்டால் அதற்கவர்கள் தமது தலையை திருப்பிக் கொண்டு கர்வம் பிடித்தவர்களாக திரும்பிச் செல்வதை நீர் காண்பீர்.'** -அல்குர்ஆன் முனாஃபிகூன் வசனம் 5.

அடுத்து இறைவன் கூறும் இன்னொரு வசனத்தையும் பாருங்கள்....

وَإِذَا قِيلَ لَهُمْ تَعَالَوْا إِلَىٰ مَا أَنزَلَ اللهُ وَإِلَى الرَّسُولِ رَأَيْتَ الْمُنَافِقِينَ يَصُدُّونَ عَنكَ صُدُودًا

**'அல்லாஹ் இறக்கிய வேதத்தின் பாலும், அவனது ரஸூலின் பாலும் நீங்கள் வாருங்கள் என அவர்களுக்கு சொல்லப்பட்டால் அந்நயவஞ்சகர்கள் உம்மை விட்டும் விலகி விடுவதையே நீர் காண்பீர்.'** –அல்குர்ஆன் நிஸா, வசனம் 61.

**நபியவர்கள் கேட்டால்தான் அல்லாஹ் மன்னிப்பான்**

وَلَوْ أَنَّهُمْ إِذ ظَّلَمُوا أَنفُسَهُمْ جَاءُوكَ فَاسْتَغْفَرُوا اللهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُولُ لَوَجَدُوا اللهَ تَوَّابًا رَّحِيمًا

**'அவர்களில் யார் தமது ஆன்மாவுக்கு தீங்கிழைத்துக் கொண்டவர்களாக** (ரஸூலாகிய) **உம்மிடம் வந்து அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோரி ரஸூலாகிய நீரும் அவர்களுக்காக பாவ மன்னிப்பு கோரினால் அவர்கள் அல்லாஹ்வை மன்னிப்போனாகவும் இரக்கமுடையோனாகவும் காண்பார்கள்.'** -அல்குர்ஆன் நிஸா, வசனம் 64.

மன்னிப்பவன் அல்லாஹ். பின்னர் எதற்காக ரஸூலிடம் வரவேண்டும் எனக் கூறுகிறான்? இனி யார் வர மறுக்கிறார்களோ அவர்கள் கர்வம் பிடித்தவர்கள் என்றும் கூறுவதால் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நாம் நமது நபியவர்களின் வழிகாட்டுதலை தெளிவாக விளங்கி செயலாற்ற அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக ஆமீன். ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்.

*முற்றும்.*

www.sufimanzil.org